
December-2017 | Volume-4 | issue-39

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

டிசம்பர் - 2017 பருவம் - 4 புனல் - 39 தனிச்சுற்று நன்கொடை ரூ 20

for private circulation only



# பார்ப்பன-இந்திய தேசியக் கட்சிகளின் மெகா ஊழல்கள்

பல்லடம் நாராயணமூர்த்தி, திருப்பூர் வேணி

# ஜாதியைக் காக்கும் கிராமங்களை விட்டு வெளியேறிய லிவிங் டுகெதர் இணையர்



தோழர்கள்

**ஸ்ரீதேவி - வெள்ளைத்துரை**

## நேர்காணல்

ஒருவருடைய ஜாதி என்ன என்று தெரிந்து கொள்ள அன்று முதல் இன்று வரை ஏதுவாக இருக்கும் கேள்வி இதுதான். நீங்கள் எந்த ஊர்? அந்த ஊரில் எந்தப் பகுதி என்று கேட்பதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். வாழும் இடத்தைத் தெரிந்து விட்டால், ஜாதியை மிக எளிதாகக் கண்டுபிடிக்கலாம். அதன் பிறகு, அவரது ஜாதியின் அடிப்படையில் உறவைத் தொடரலாம் அல்லது நிறுத்தலாம் என்ற எண்ணத்தில் இப்படிக் கேள்விகள் இன்றும் நிலவுகின்றன. அப்படி, வாழும் இடத்தை வைத்தே ஜாதியை அறிந்து கொள்ளும்படி இறுக்கமான ஜாதி நடைமுறைகளை வகுத்துள்ளது இந்து மதமும், அதன் மனுசாஸ்திரங்களும்.

“இவர்கள் அனைவரும் பட்டணத்திற்கும் ஊருக்கும் வெளியில், மரத்தடி, தோப்பு, சுடுகாட்டிற்குச் சமீபமான இடத்தில் இவர்களது தொழில் இன்னதென்று பிறருக்குத் தெரியும்படி, தொழிலைச் செய்துகொண்டு வாழ வேண்டும்.

இவர்களுக்கு உலோக பாத்திரங்கள் கூடாது. அவர்கள் தீண்டின பாத்திரங்கள் சுத்தம் செய்தாலும் பரிசுத்த மாகாது. அவர்கள் நாய் வளர்க்கலாம். மாடு முதலிய வற்றை வைத்து வாழக்கூடாது. பிணத்தின் துணியை மட்டுமே உடுத்த வேண்டும். தங்கள் ஜாதியிலேயே திருணம் செய்ய வேண்டும்.

- மனுசாஸ்திரம், அத்தியாயம் 10, ஸ்லோகம் 49, 53

என்று மனு சாஸ்திரம் கூறுகிறது. இந்த வகைத் தீண்டாமைக்குத் தீர்வுகாணும் வகையில் தோழர் பெரியார் கூறகிறார்.

“கிராமத்தில் ஜாதியசாரமும், குலஆசாரமும் ஒருவன் தனக்கிஷ்டமான தொழிலைச் செய்வதற்குத் தடையா யிருக்கின்றன. சில ஜாதிகள் செருப்புப் போட்டுக் கொண்டு நடக்கக்கூடாது. குதிரையேறக் கூடாது. வண்டியேறக்கூடாது. வேட்டியை முழங்காலுக்குக் கீழே தொங்கவிட்டுக் கட்டிக்கொள்ளக் கூடாது என்ற பல கொடுமைகள் இன்னும் அனேக கிராமங்களில் இருந்து வருகின்றன. இவ்வித நிர்பந்தங்களுக் கடங்கித்தான் சுயமரியாதையை இழந்து தொழில் செய்து கிராமங்களில் வாழ்வதை விடப் பட்டணங் களுக்கு போவது மேல் என்றார்

(தோழர் பெரியார், பகுத்தறிவு, மே, 1936)

தோழர் பெரியாரின் திராவிடர் பண்பாட்டு அடிப்படையில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே சிறப்புடன் வாழ்ந்து கொண்டுள்ள இணையர் ஸ்ரீதேவி - வெள்ளைத்துரை அவர்களின் அனுபவங்களைப் பார்க்கலாம். வாருங்கள்

**இருவருடைய அறிமுகம்.**

எங்களது வாழ்க்கைப் பயணத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடை கிறேன். எனது பெயர் ஸ்ரீதேவி. நான் ஒரு சமூகப் பணியாளர். எனது துணைவர் வெள்ளைத்துரை. அரசுப்பள்ளி அசிரியர். நாங்கள் சாதிமறுப்பு மண வாழ்வை வாழ்ந்து கொண்டுள்ளோம். தாழ்த்தப் பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட என்று சொல்லப் படுகிற ஜாதிப் பிரிவுகளைச் சார்ந்த நாங்கள் காதலித்து மணம் செய்து கொண்டோம். 12 ஆண்டுகள் கடந்துவிட்டன.

**இருவரும் திருமணம் செய்து கொண்ட நிகழ்வைப் பற்றிக் கூறங்கள்?**

நான் தூத்துக்குடி மாவட்டம். எனது துணைவர் திண்டுக்கல் மாவட்டம். இருவரும் சென்னையில் உள்ள சமூக சேவை நிறுவனத்தில் பணிபுரியும்போது அங்கு அறிமுகமானோம். நல்ல நண்பர்களாகப் பழகினோம். பிறகு, நிறைய விடயங்களில் ஒத்த கருத்துடையவர்களாய்

இருப்பதைப் புரிந்து திருமணம் செய்து சேர்ந்து வாழ்வதெனத் தீர்மானித்தோம். எந்தச்சடங்கு, சம்பிரதாயமும் இன்றி இருவரும் 25.12.2005-ம் தேதியிலிருந்து நாங்கள் இணைந்து வாழத் தொடங்கினோம்.

**திருமணத்திற்கு பிறகு நீங்கள் இருவரில் யாருடைய கிராமத்தில் குடியேறினீர்கள்?**

திருமணம் முடிந்ததும் இருவருடைய சொந்தக் கிராமங்களுக்குச் செல்லாமல் நகரத்தில் வாழ்வதென முடிவெடுத்து திருப்பூர் சாமுண்டிபுரம் குமார்நகரில் குடியேறினோம். அதற்குக் காரணம் சாதிக் கட்டுப்பாட்டை அதிகமாய் இறுக்கி பிடித்திருக்கிற இடமாகக் கிராமங்கள் உள்ளன. அந்த நெருக்கடிகளையும், கொடுமைகளையும் தவிர்ப்பதற்காகத்தான்.

**நீங்கள் குடியேறிய நகரத்தில் நடந்த அனுபவங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

திருப்பூர் நகரம் பெயருக்குத்தான் நகரம். அங்கும் சில கசப்பான அனுபவங்களை உணர்ந்தோம். வீடு வாடகைக்குக் கேட்டுச் செல்லும் போது மிக வெளிப்படையாக "நீங்க என்ன ஆளுங்க?" என்று கேட்டனர். ஏன் என்று கேட்ட போது "இல்லை தண்ணி பொழங்காத சாதிக் கெல்லாம் வீடு தரமாட்டோம். அதனால்தான் கேட்கிறோம். நீங்க தப்பா எடுத்துக்காதிங்க" என்றனர்.

மிக ஆழமாய் யோசித்துப் பார்த்தேன். தண்ணீர் பொழங்காமல் உயிர் வாழும் மனித ஜாதியும் மண்ணில் இருக்க முடியுமா என்று, அதற்கான பொருள் புரிய வெகுநேரம் ஆகவில்லை. அது பச்சைத் தீண்டாமை வடிவம்தான். பிறகு எனது துணைவரின் கல்லூரி நண்பர்களின் உதவியோடு வீடும், வேலையும் கிடைத்தது. இருவரும் வேலைக்குச் சென்று வாழ்ந்தோம். அங்கேயும் நாங்கள் எந்தெந்த ஜாதியைச் சார்ந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவலோடுதான் அனைவரது விசாரிப்புகளும், அறிமுகங்களும் இருந்தன. இதுபோன்ற குப்பைத் தொட்டியிலா நாம் பிறந்து வாழ்கிறோம் என்ற எரிச்சல் இந்த நாட்டின் மீது வராமலில்லை.

**இந்தக் கொடுமைகளில் இருந்து விடுபடுவதற்கு இருவரும் இணைந்து என்ன முடிவு எடுத்தீர்கள்?**

இருவருடைய குடும்பத்தின் ஆதரவுமின்றி வாழ்க்கையைத் தொடங்கினோம். எந்தக் கஷ்டம் வந்தாலும் நாம் சந்திப்போம் என்று உறுதியுடன் இருந்தோம். எம்.காம். வரை மட்டுமே படித்திருந்த என் கணவர் 2008-ஆம் ஆண்டு மேற்கொண்டு ஆசிரியர் பயிற்சிப் படிப்பான பி.எட்., படிக்க விரும்பினார். நான் உடனே "தாராளமாய்ப் படியுங்கள், .நான் வேலைக்குப் போய் உதவி செய்கிறேன்" என்று அவரை படிக்க அனுப்பி வைத்தேன். இதற்கிடையில் எங்களைப் பிரிக்க எங்கள் பெற்றோரும், உற்றாரும், சமூகமும் பல முனைத் தாக்குதலில் ஈடுபட்டார்கள். பயமுறுத்தினார்கள். பாசமாகப் பேசினார்கள். இரண்டிற்கும் அஞ்சாமல் உறுதியோடு நின்றோம். நானும் சமூகப்பணி மூலம் சுற்றியுள்ள மக்களிடையே நன் மதிப்பையும், நம்பிக்கையும் பெற்றேன். ஆனாலும், வறுமை எங்களை விட்டுச் செல்ல மன மில்லாமல் இருந்தது.

## நாங்கள் எந்தெந்த ஜாதியைச் சார்ந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவலோடுதான் அனைவரது விசாரிப்புகளும், அறிமுகங்களும் இருந்தன. இதுபோன்ற குப்பைத்தொட்டியிலா நாம் பிறந்து வாழ்கிறோம் என்ற எரிச்சல் இந்த நாட்டின் மீது வராமலில்லை.

திருப்பூர் சாமுண்டிபுரம் குமார் நகரில் ஒரு வருடம் வாழ்ந்துவிட்டு, ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் திங்களூரில் குடியேறினோம். மேலும், எனது துணைவரும் படிப்பை முடித்த பின் என்னோடு சேர்ந்து அதே தொண்டு நிறுவனத்தில் பணியாற்றினார். அப்போது பாரதி பிறந்தாள். 2013 ஆம் வருடம். ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்திய (டி.ஆர்.பி) தேர்வில் தேர்ச்சி பெற்று எனது துணைவர் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியினைப் பெற்றார்.

இரண்டாவது மகள் மார்க்ஸ் பிறந்தாள். நாங்கள் 7ஆண்டுகளாக குடியிருந்த வீட்டை உரிமையாளர் விற்பதாக அறிவித்திருந்தார். அப்பொழுது நாங்கள் இருவரும் ஆலோசித்தோம். இந்த இடத்தை விட சௌகரியமாகக் குடி இருப்பதற்கு வேறு எங்கும் செல்ல வேண்டாம். இந்த இடத்தை நாமே விலைக்கு வாங்கி விடலாம் என்று முடிவெடுத்தோம். வங்கியில் கடன் பெற்றோம். எனது நகைகளையும் அடகு வைத்து அதே வீட்டை

நாங்கள் சொந்தமாக வாங்கினோம். அதனைச் சற்று விரிவுபடுத்தி, 6 குடும்பங்களுக்குத் தற்போது வாடகைக்கு விட்டுள்ளோம்.

சுயபெருமைக்காக இதனைச் சொல்லவில்லை. எந்தச் சாதி, எந்த மதம் என்றெல்லாம் நாங்கள் விசாரித்து யாரையும் புண்படுத்துவது இல்லை. கிறிஸ்துவர், இசுலாமியர் உள்ளிட்ட அனைவரும் எங்கள் வீட்டில் குடியிருக்கிறார்கள். எங்களை என்ன ஆளுங்க என்று கேட்ட அந்த ஜாதியைச் சார்ந்த சகோதரரும் கூட எங்கள் வீட்டில் வாடகைக்கு இருக்கிறார்கள்.

ஜாதி கடந்து மணம் புரிந்த தம்பதியினருக்கு முதலிடம் அளித்து வீட்டை வாடகைக்குக் கொடுத்து இருக்கின்றோம். இந்திய நாட்டிற்கு பிடித்திருக்கிற கொடிய நோயான ஜாதியை, ஜாதி மறுப்புத் திருமணங்கள்தான் குணப்படுத்தும் என்று நாங்கள் முழுமையாக நம்பி, உன்னதமான பெரியாரிய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

**இருவருடைய கிராமங்களிலிருந்து வெளியேறி இம்மாதிரியான 'தனிக்குடித்தனம்' என்ற வாழ்க்கை முறையை உங்கள் இருவரின் குடும்பத்தினரும் உங்களைச் சுற்றி வாழ்பவர்களும் எப்படிப் பார்க்கிறார்கள்?**

எங்க அத்தை எங்க வீட்டிற்கு ஒவ்வொரு முறையும் வரும் போதெல்லாம் என்னிடம் சொல்ல மாட்டார். எங்கள் வீட்டில் குடியிருப்பவர்களிடம் கூறுவார். அவர்கள் என்னிடம் வந்து சொல்லுவார்கள். "என் பையனுக்கு நாங்களே ஒரு பொண்ணப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சிருந்தா அந்த கிராமத்திலேயே அவன் வாழ்க்கை முடிந்திருக்கும். அவனே தேடிக்கிட்ட வாழ்க்கை ரொம்ப நல்லா இருக்கான் .மருமகளோட திறமையான வாழ்க்கை முறையால எல்லாருக்கும் எடுத்துக் காட்டா வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனக்கு பெருமையா இருக்கு" அப்புடின்னு சொல்லுவாங்க. எல்லாரும் வழக்கமா சொல்லுவாங்க, தனிக் குடித்தனம் போய்ட்டாலே பெத்தவங்களை மதிக்க மாட்டாங்க. கடைசி காலத்துல கொண்டு போய் ஆசிரமத்துல அனாதையா விட்டு வருவாங்கன்னு சொல்லுவாங்க. ஆனால், எங்களுடைய வாழ்க்கையில் அப்படி இல்லை. தேவியுடைய அப்பா திருமணத்திற்கு முன்னாலேயே இறந்துவிட்டாங்க. அவுங்க அம்மாவ நாங்கதான் பார்த்துக்கிட்டோம். நாங்க சொந்தவீடு வாங்கினதுக்கு அப்புறம் தேவியுடைய அம்மாவை எங்க வீட்டிலேயே தங்க வைச்சிக்கிட்டோம். ஆகஸ்ட் 30ஆம் தேதி 2017 அன்றுதான் உடல்நிலை சரியில்லாத காரணத்தால காலம் ஆயிட்டாங்க. உறவினர்களும், தோழர்களும் மத்தியில நல்லடக்கம் செஞ்சிட்டோம். பெற்றோர்களை கடைசிக் காலத்துல நல்லமுறையா பாத்துக் கிட்டோம்.

**ஜாதி மறுப்புத் திருமணம் செய்வோரும், ஜாதியை மறுத்து வாழ விரும்புவோரும், ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும் என்று கூறுகிறீர்கள்?**

சுய ஜாதிக்குள் மணம் செய்து வாழ்வில் சாதித்து விட்டதாகப் பெருமை பேசுகிறவர்களைப் பார்த்தால் நான் மனதுக்குள் சிரித்துக்கொள்வேன். காரணம் அங்கே எதையும் எதிர்த்து போராட வேண்டிய அவசியமில்லை. எந்த இலக்கும் இல்லாமல் சுகமாய் வாழலாம். அதைச் சாதனை என்று பேசினால் சிரிப்பு வராமல் இருக்குமா?

**மனிதனை மனிதன் நாயினும் கீழாக, புழுவினும் அருவருப்பாய்ப் பார்க்க ஜாதி அமைப்பு தான் காரணம். கண்ணுக்குத் தெரியாத அந்த அமைப்பு தகர்க்கப்பட வேண்டுமென்றால் ஜாதி மறுப்பு திருமணங்கள்தான் தீர்வு. அதிலும் வெறுமனவே ஜாதிமறுப்பு திருமணம் செய்து கொண்டால் மட்டும் போதாது. தனது சுய குடும்பப் பற்று, பெற்றோர், உறவினர் பற்று, சாதியைத் தக்க வைக்கிற மூடத்தனமான சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றைத் தூக்கி எறிந்து விட்டு அவற்றையெல்லாம் வலுப்படுத்தி வைத்திருக்கும் கிராமங்களை உதறிவிட்டு வெளியேறும் துணிவும், வீரமும் காதலோடு கைக்கோர்க்க வேண்டும். அவ்வாறு இல்லாத ஜாதிமறுப்பு மணங்களால் எந்தச் சமூக மாற்றமும் நடைபெறாது. ஒரு குப்பைக் குழியில் இருந்து வேறு ஒரு குப்பைக் குழிக்கு இடம் பெயர்ந்து செல்வதைப் போலத்தான் இருக்கும்.**

பெரியகுளம் குமரேசன்

2

# பார்த்ததும் கேட்டதும்

## படிச்சோம்... ஆனா படிக்கல...

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்னடா இவன் திருக்குறளோடு ஆரம்பிக்கிறான்னு நினைப்பீங்க?. ஓரளவு ஆரம்பப்பள்ளி வரையாவது சென்றவர்களுக்குக் கண்டிப்பாகத் தெரியும் மேலே உள்ளது திருக்குறள் என்றும் அதற்கான விளக்கமும். இப்படி பார்த்தவுடனே இது திருக்குறள் தான் என்று எல்லோரும் தெரிந்து கொள்வதற்கும், அதனை நம்மனதில் பதியவைத்தற்கும் எல்லோரும் படிக்கும் படி பொதுப்படுத்தியதற்கும் முக்கியக் காரணம் திராவிட இயக்கமும், திராவிட அரசியல் கட்சிகளும் தான்

திருக்குறளுக்கும் திராவிடத்திற்கும் என்ன சம்பந்தமென்று, தமிழ் தேசியம் என்கிற போர்வையில் இனவாதம், சாதியவாதம் பேசுற பலபேர் கேட்கின்றார்கள். ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள் என்று நமக்குப் புரிகிறது, அதற்கு பதிலும் அவர்களுக்கும் தெரியும், தெரிந்தும் தெரியாதது போல் நடித்து புதிதாக அரசியலைப் பற்றி தெரிந்து கொள்ள நினைக்கும் இளம் தலைமுறைக்கு ஒரு குழப்பத்தை ஏற்படுத்தத்தான் அவ்வாறு பேசுகிறார்கள்.

பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட அடிமைகளால்தான், திராவிடம் என்ன செய்தது. திராவிடத்திற்கு முன்னே இங்கே பாலாறும் தேனாறும்தான் ஓடிக்கொண்டிருந்தது, நாங்க எல்லாரும் வீட்டில் வாசலில் உட்கார்ந்து தினம் ஒரு டப்பாவில அள்ளிக் குடித்துக் கொண்டிருந்தோம், இந்தப் பாழாய்போன திராவிடம் தான் டப்பாவைப் புடுங்கிக் கொண்டது என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

நாம் என்னதான் உண்மையை வாய்கிழியக் கத்தினாலும் இந்தப் பார்ப்பன அடிமைகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்த நேர்மையற்ற அடிமைகள் எல்லாம் சேர்ந்து அடிக்கடி உபயோகிக்கும் வார்த்தை தான் ‘மெய்ப்பொருள் காண்பதறிவு’. இவர்களது அறிவையும் கொஞ்சம் பார்த்தால் நமக்கு மெய் சிலிர்த்து விடும்.

ஒருமுறை தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதில் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் சார்பாக அந்தந்தக் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். பிஜேபியும் கலந்து கொண்டது. ஆர்.எஸ்.எஸின் ‘தமிழ்’ பிரிவான நாம் தமிழர் கட்சியின் சார்பாக ஒருவரும் கலந்து கொண்டார். நாம் எல்லோரும் ஒரு வார்த்தைய கேள்விப் பட்டிருப்போம். *Born with Silver spoon* என்று வசதியான குடும்பத்தில் பிறந்து, உழைத்து வாழத் தேவையில்லாதவர்களை அவ்வாறு அழைப்போம்.

அதே மாதிரியான டிசைன் தான் நாம் தமிழர் கட்சி ஆட்களுக்கும். பிறக்கும் போது மனித மூளையுடன் பிறந்து, போகப்போக ஆட்டு மூளையாக மாறும் விசித்திரப்பிறவி தான் இவர்கள். அப்படி ஒரு விசித்திரக்கூட்டத்தில் வந்த ஒருவர் தான் அந்த விவாதத்தில் கலந்து கொண்டார். இவர்களுக்கு பார்ப்பனரே ‘நல்ல மேய்ப்பான்’

அந்த விவாதத்தில் பல்வேறு செய்திகளைப் பற்றிப் பேசும் போது, திமுகவைச் சேர்ந்த திரு. அப்பாவு அவர்களும், அதிமுகவைச் சேர்ந்த திரு. கலைராஜன் அவர்களும் (அதிமுக வில் ஓரளவாவது திராவிடக்கொள்கை பேசுபவர்களில் கலைராஜனும் ஒருவர்) திராவிட இயக்கங்களின் போராட்டங்கள் மற்றும் திராவிட இயக்க ஆட்சியில் தான் கல்வி எல்லோருக்கும் கிடைத்தது என்று சொன்னார்கள். அதற்கு நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த அந்த நபர் சொன்ன பதில் தான் ஹைலைட்...

காவிரி, தென்பெண்ணை, பாலாறு- தமிழ்
கண்டதோர் வைகை பொருனை நதி- என
மேவிய யாறு பலவோடத்- திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

இந்தப் பாடலோடுதான் ஆரம்பிப்பார். இந்தப் பாட்டெழுதினது எட்டையாபுரத்தைச் சேர்ந்த சுப்புரமணி என்ற பாரதியார். இந்தப் பாட்டுக்கு மேல இன்னொரு வரி இருக்கும். அத அந்தத் தம்பி சொல்லவில்லை

வேதம் நிறைந்த தமிழ் நாடு-உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு நல்ல
காதல்புரியும் அரம்பையர் போல்-இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு.

இந்தப் பாட்டின் பிழையை நாம் பிறகு பார்ப்போம். திராவிடம் தான் உங்களையெல்லாம் படிக்க வைத்தது என்றால், அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் மேலே உள்ள பாடலை மூச்சுவிடாமல் அவங்க கம்பெனி ஓனர் போல (அதாங்க நம்ம நியோ பிராமிணத் தல சீமான்) பாடிவிட்டு, இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்ன திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். அப்ப திராவிடம் இருந்ததா? என்று அதி புத்திசாலித்தனமான ஒரு கேள்வியைக் கேட்டார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்குத் தான் உடம்பு அதிகமா சிலிர்த்து தெற்க, வடக்க இழுக்க ஆரம்பித்துவிட்டது. உடனே தொலைக் காட்சியை அணைத்துவிட்டு என்னை நானே காப்பாற்றிக் கொண்டேன். என்ன அற்புதமான கேள்வி, ச்சே சான்ஸே இல்லை, கேள்வியக் கேட்டவர் ஒரு வழக்கறிஞர் கூட. கேள்வியின் தாக்கம் அதிகமாக இருந்தாலும் பதில் நாம சொல்லித்தானே ஆகணும். ஒரு அசுரகுலத்தில் பிறந்து இதுக்கெல்லாம் பயப்படமுடியுமா?.

இங்கே நம்மைப் படிக்கவைத்தது திராவிடம் தான் என்று சொன்னால், அதற்கு அவர் இல்லை இங்கு எல்லா இயற்கை வளமும் இருந்தது என்று சொல்லி சுப்புரமணிய பாரதியாரின் பாட்டைப் பாடுகிறார். இயற்கை வளம் இருந்தால் போதுமா? கல்வி தானாக வந்துவிடுமா? இயற்கை வளம் அதிகமாக இருக்கிற எத்தனையோ மாநிலங்களில் கல்வி அறிவு இல்லாததால் அவர்களுடைய வளங்களும் சுரண்டப்படுக்கின்றன. இரண்டாயிரம் வருசத்திற்கு முன்னாடி எழுதிவைத்ததை எல்லோரும் படிக்கனுமில்ல, ஏன் படிக்கவில்லை, யார் படிக்கவிடல, இப்ப யார் படிக்கவைத்தது. என்பதை சிந்தித்து பார்க்க வேண்டுமில்லையா?

இரண்டாயிரம் வருசத்துக்கு முன்னாடி எங்க பெரும்பாட்டன் வள்ளுவர் சொந்தமாக படித்து திருக்குறளை எழுதினார், அவர் எந்தத் திராவிடத் தால் படித்தார்? என்று கேட்கிற நம்ம ஆட்டு மூளைக்காரர்கள், பதிலுக்கு நாம் நீ ஏண்டா உங்க பெரும்பாட்டன் எழுதினதப் படிக்கலைன்னு கேட்டா?, இல்ல எங்களை திராவிடம் தான் படிக்க விடல என்று சொல்வார்கள். இப்ப எப்படி படிச்சன்னு கேட்டா, நாங்கெல்லாம் அப்பவே அப்படின்னு உளற ஆரம்பிப்பார்கள்.

இரண்டாயிரம் வருசமாக வெளியிலிருந்து இங்க வந்த ஆரியம் தான் நம் கல்வியை மறுத்தது. அதை மீண்டும் நமக்களித்தது திராவிடம். சூத்திரனுக்கு கல்வியை வழங்காதே என்றது ஆரியம். திராவிடத்திற்கு முன்னே இங்கே யாரும் படிக்க வில்லையா என்று கேட்டால், படித்தார்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக, வசதி வாய்ப்பில் மேலோங்கி இருந்த பார்ப்பனரல்லாதவர்களுக்கு அந்த வாய்ப்பு இருந்தது. கல்வியும் வேலைவாய்ப்பும், கல்வி கற்பதற்கான சூழல் முழுவதும், பார்ப்பனர்கள் வசமே இருந்தது.

சென்னையில் பார்ப்பனரல்லாதார் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு கி.பி.1913 வரை ஒரு விடுதிகூட இல்லை. கி.பி.1914ம் ஆண்டு நீதிக்கட்சியைச் சேர்ந்த டாக்டர். நடேசன் அவர்களால் ‘திராவிடர் இல்லம்’ என்ற விடுதியைத் தொடங்கி பார்ப்பனரல்லாதார் மாணவர்கள் சென்னையில் தங்கிப் படிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தினார். அந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குமான செலவையும் ஏற்றவர். கி.பி.1923ல் மதராஸ் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தார். எல்லாவற்றிக்கும் முன்மாதிரியாக விளங்கும் சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிசன் அமைப்பதில் பெரும்பங்கு வகித்தார்.

**தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சி... அதில் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் சார்பாக அந்தந்தக் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். பிஜேபியும் கலந்து கொண்டது. ஆர்.எஸ்.எஸின் ‘தமிழ்’ பிரிவான நாம் தமிழர் கட்சியின் சார்பாக ஒருவரும் கலந்து கொண்டார்...**

இந்தியாவிலேயே முன்னோடியாக சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவு திட்டத் தைக் கொண்டு வந்தவர் நீதிக்கட்சியை உருவாக் கியவர்களில் ஒருவரான சர்.பிட்டி தியாகராயர். நீதிக்கட்சி வருவதற்கு முன்பு மருத்துவத்திற்கு நுழைவுத்தேர்வாக சமஸ்கிருதம் தான் இருந்தது. அதை மாற்றியதும் திராவிடம் தான். இப்படி கல்வியில் ஒரு பெரும் புரட்சி செய்துதான் நாம் கல்வியைப் பெறமுடிந்தது.

இரண்டாயிரம் வருசத்திற்கு முன்னாடி எழுதப்பட்ட திருக்குறளை பெரியாரும், பெரியார் இயக்கங்கள் தான் மக்களிடம் கொண்டு சேர்த்தனர். பெரியார் மட்டும் திருவள்ளுவரை கையில் எடுக்க வில்லையென்றால். திருவள்ளுவருக்கு எப்போதோ பூணூல் அணிவிக்கப்பட்டிருக்கும். வள்ளுவருடன் சேர்ந்து திருக்குறளும் மயிலாப்பூரில் ஜீவ சமாதி யாகிருக்கும். திருக்குறளை மக்களிடம் கொண்டு சொல்ல பெரியாரும், பெரியார் இயக்கங்களும் செய்தது என்னவென்று பார்ப்போம்.

புலவர்கள் மத்தியில் மட்டும் நடமாடிக் கொண்டிருந்த குறளை மக்கள் மத்தியில் தவழச் செய்ய முதன் முதலில் சென்னையில் மாநாட்டைக் கூட்டினார் தந்தை பெரியார். அதில் அறிவாய்ந்த தமிழ்ப் பெருமக்களைப் பங்கு பெறச் செய்தார். 15.01.1949 அன்று திருவள்ளுவர் - குறள் மாநாடு கூட்டப்பட்டது.

**பெரியார் வேண்டுகோள்!**

திருவள்ளுவர் மாநாடு சென்னையில் பிரபல மாய் பல அறிஞர்கள் தலைமையையும், சொற் பொழிவுகளையும் கொண்டு இம்மாதம் 15, 16 சனி, ஞாயிறுகளில் நடக்கின்றது.

திராவிடர் கழகம் அதில் நல்ல பங்கு கொள்ள வேண்டும் என்பது எனது ஆசை. ஏனென்றால், தமிழர்களுக்கு ஆரியக் கலைகள், ஆரிய நீதி நெறி ஒழுக்கங்கள் அல்லாமல் வேறு இல்லை என்பது மாத்திரமல்லாமல், இவைகளில் ஆரியர் வேறு தமிழர் வேறு என்று பாகுபடுத்துவது தவறு என்றும் கூறுவதோடல்லாமல், குறள் முதலிய தமிழர் பண்பு, ஒழுக்கம், நெறி ஆகியவைகளைக் காட்டும் தமிழ்மறைகள் பலவும் ஆரியத்தில் இருந்து ஆரிய வேத, சாஸ்திர, புராண, இதிகாசங்களில் உள்ளதைத் தொகுத்து எழுதப்பட்டவையே என்றும், பெரும் அளவுக்கு ஆரியர்கள் பிரசாரம் செய்வது மாத்திர மல்லாமல் பலவகைத் தமிழர்களைக் கொண்டும் அப்படிப்பட்ட பிரச்சாரம் நடைபெற்று வருகிறது.

குறளைப் பொறுத்தவரை என்னுடைய கருத்து ஆரிய கலை, பண்பு, ஒழுக்கம், நெறி முதலியவை யாவும், பெரிதும் தமிழர்களுடைய கலை, பண்பு, நெறி, ஒழுக்கம் முதலியவைகளுக்கு தலைகீழ் மாறு பட்டதென்பதும், அம்மாறுபாடுகளைக் காட்டவே சிறப்பாக குறள் உண்டாக்கப்பட்டது என்பதும் உறுதியான கருத்தாகும். குறளிலும் சிற்சில இடங்களில் ஆரியப் பண்பு கலப்பு இருக்கின்றது என்று இன்று பல பெரியார்கள் கருதுகிறார்கள். அதற்கேற்றப்படி சில எடுத்துக்காட்டுகளையும் காட்டுகிறார்கள்.

ஏதோ சில இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்டவைகளை நாம் இக் காலத்துக்கும், குறளாசிரியரது பெரும்பாலான கருத்துக்கும், ஒப்பிட்டுப் பார்த்து நல்ல கவலையுடன் சிந்தித்தோமே யானால் ஏதாவது நம் கருத்துக்கு ஏற்ற தெளிபொருள் விளங்கும் என்றே கருதுகிறேன். விளங்காவிட்டாலும் அவை குறளின் தத்துவத்துக்கு முரண்பாடானது என்றாவது தோன்றலாம். அதுவும் இல்லாவிட்டால் நம் பகுத்தறிவுப்படி பார்த்து, கொள்வதைக் கொண்டு, விலக்குவதை விலக்கலாம்.

நீண்ட நாள் நம் கலைகள், பண்புகள் எதிரிகளின் இடையிலேயே காப்பு அற்றும், நாதி அற்றும் கிடந்ததாலும் அன்னிய கலை, பண்பு ஆட்சிக்கு நாம் நிபந்தனை அற்ற அடிமைகளாக இருந்ததாலும், நம் கலைகளில் இப்படிப்பட்ட தவறுதல்கள் புகுவது, நேருவது இயற்கையே யாகும். ஆதலால் அப்படிப்பட்ட ஏதோ சிலவற்றிற்காக நம்முடைய மற்றவைகளையும் பறி கொடுத்துவிட வேண்டும் என்பது அவசியமல்ல.

எனவே, குறள் தத்துவத்தை விளக்கிட வென்றே நடத்தப்படும் இம் மாநாட்டில் நாம் பங்கு கொண்டு தத்துவங்களை உணர்ந்து, தமிழ்ப் பாமர மக்கள் இடையில் அந்தத் தத்துவங்கள் புகும்படி செய்ய வேண்டியது நம் கடமையாகும். திராவிடர் கழகம் என்பது சமுதாய முன்னேற்றத்திற்காகவே இருப்பதால், அதன் சமுதாயக் காரியங்களுக்கு குறள் தத்துவம் பெருமளவுக்கு அவசியமாகும். ஆதலால், குறள் மாநாட்டைத் தமிழர்கள், திராவிடர்க் கழகத்தார் நல் வாய்ப்பாகக் கொண்டு கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

தோழர் பெரியார் -விடுதலை 10.01.1949

**திரு.வி.க.**

பெரியார் இன்று குறளைக் கையில் ஏந்தியுள்ளார். பலப்பல நூல்களை ஒதுக்கிக் கொண்டே வந்த பெரியார் குறளை மட்டும் கையில் ஏந்தியிருக்கும் காரணம் என்ன? திருக்குறள் உலகப் பொதுநூல். பெரியாரின் உலகப் பொது இயக்கத்திற்கு ஏற்ற உலகப் பொது நூல் திருக்குறளே! எனவேதான் அது பெரியாரின் கையிலே வீற்றியிருக்கிறது.

யார் யாரோ குறளைப் பாராட்டினார்கள். போற்றினார்கள். ஆனால், அவர்கள் தொண்டின் பயனாகவெல்லாம் குறள் தனக்கு உரிய இடத்தை அடைந்ததில்லை. இன்று பெரியார் குறளை ஏந்தியிருக்கிறார். இனி மிக விரைவில் குறள் தன் சிறப்பிடத்தை எய்துவது உறுதி! உறுதி!

அந்த திரு.வி.கல்யாணசுந்தரமே சொல்லி விட்டார், பெரியார் திருக்குறளை கையிலெடுத்த பிறகு தான் அது எல்லோருக்குமான ஒன்றாக மாறியது என்று. ஆதலால் இந்த நவீன கல்யாண ராமன்களையும், கல்யாணசுந்தரங்களையும் புறம் தள்ளுவோம். கல்வியில் பெரியாரும், திராவிட இயக்கங்களும் செய்த புரட்சியையும் அடுத்தடுத்து பார்ப்போம். பார்ப்பனீயம் தமிழர்களை மற்றும்தான் ஏமாற்றுகிறதா ???

– பார்ப்போம்

விமல் பிரகாஷ், அரசு கலைக்கல்லூரி, கோவை

# நூல் அறிமுகம்

## 'நீடாமங்கலம் சாதிய கொடுமையும் திராவிட இயக்கமும்'


திராவிடர் இயக்கம் பிற்படுத்தப்பட்டவர்களுக்காகப் பாடுபட்டது.அது தாழ்த்தப்பட்டோருக்கு விரோதியான இயக்கம் என்பதைப் போன்று சில கருத்துக்களை ஒரு சில கூட்டம் பரப்பி வருகின்றது. இந்த வாதத்தை உடைக்க இந்த நூல் கூறும் வரலாற்றை கொஞ்சம் விரிவாகப் பார்க்க வேண்டும். இந்நூல் 1937-ல் இருந்த சமூக அரசியல் சூழலும், சுயமரியாதை இயக்கம் ஆற்றிய பணிகளையும் எடுத்துக் கூறுகின்றது. பின் 1937-ல் இறுதியில் நடந்த வன்கொடுமையை எடுத்துரைக்க ஆரம்பிக்கிறது. இந்நூலின் அறிமுகத்தைப் பார்ப்பது மட்டும் இல்லாமல் இந்த நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் சிலவற்றை விரிவாகப் பார்க்க வேண்டியுள்ளது.

நீடாமங்கலம் தீண்டாமைக் கொடுமை நடந்த சமயத்தில் சுயமரியாதை இயக்கம் ஆற்றிய எதிர்வினை, சுயமரியாதை இயக்கம் எதிர்கொண்ட எதிர்ப்புகளும், பிரச்சனைகளையும் அச்சமயத்தில் தாழ்த்தப்பட்ட தலைவர்கள் என்று கூறப்பட்டோரின் நிலைப்பாடு, அவர்கள் ஆற்றிய எதிர்வினை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள இந்நூல் உதவுகிறது.

**நீடாமங்கலம் இழி வன்கொடுமை:**

1937-ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் தேதி 'தென் தஞ்சை ஜில்லா காங்கிரசின் 3ஆவது அரசியல் மாநாடு' நடந்தது. இம்மாநாட்டின் தலைவராக ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் இருந்தார். இம்மாநாட்டின் வரவேற்புத் தலைவராக இருந்து அந்த மாநாட்டை முன்னின்று நடத்தியவர் டி.கே.பி. சந்தான ராமசாமி உடையார் என்பவர் ஆவார். இவர் பெரும் நிலவுடைமையாளர். மன்னார்குடி, கும்பகோணம், பாபநாசம் தாலுக்காக்களில் சுமார் 900 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு சொந்தக்காரர். இவருக்கு 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிலிம்ஸ்' நிறுவனமும் தஞ்சையில் இருந்தது. மேலும் இவரது மாளிகையும்,அரிசி ஆலையும் நீடாமங்கலம் ஓட்டூரில் அமைந்திருந்தது.

மாநாட்டின் பிற்பகுதியில் சமபந்தி விருந்துண்ணல் நடந்தது. சாதி, மத பேதமின்றி அனைவரும் வந்து உணவருந்தலாம் என்று மீண்டும், மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. அங்கு வேடிக்கை பார்க்க நின்றிருந்த சில தாழ்த்தப்பட்ட விவசாய கூலித்தொழிலாளர்கள் சற்று பயத்துடன் உணவருந்த அமர்ந்தனர்.




"மாநாட்டில் உணவருந்திக் கொண்டிருக்கும் போதே டி.கே.பி.சந்தான ராமசாமி உடையாரின் தூண்டுதலின் பெயரில் அவரது ஏஜெண்டான

சபாபதி உடையார் வந்து அவர்கள் தலைமுடியைப் பிடித்து "ஏண்டா பள்ளப்பயல்களா? உங்களுக்கு இவ்வளவு ஆணவமா? இந்தக் கூட்டத்தில் வந்து சாப்பிடலாமா?என்று கேட்டு பக்கத்தில் கிடந்த சவுக்கு கட்டையை எடுத்து அம்மூவரையும் அடித்தார்" அடி தாங்க முடியாமல் அலறினர். இவர்களின் சத்தம் கேட்டு போலீசார் அவர்களை அடிக்காமல் சமாதானம் செய்து மாநாட்டில் இருந்து அவர்களை வெளியேற்றினர். மேலும் சில தாழ்த்தப்பட்ட தோழர்கள் பந்தியை விட்டு எழுந்து சென்றனர்.

### கிருஷ்ணமூர்த்தி அய்யரும், இராமசாமி உடையாரும்

இந்நிலையில் மாநாட்டில் உணவருந்தியவர்கள் அனுமந்தபுரம் பண்ணையைச் சார்ந்தவர்கள் என்பதை அறிந்த டி.கே.பி.சந்தான ராமசாமி உடையார், அந்தப் பண்ணைக்குத் தகவலைக் கூறியுள்ளார். 29.12.1937 அன்று காலை தாழ்த்தப்பட்ட தோழர்கள் அறுவடை செய்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த பண்ணை ஏஜெண்டான கிருஷ்ணமூர்த்தி அய்யர், "கூட்டத்தில் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டது யார்? அவர்களைக் கொண்டுவா" என்று சொன்னார்.

முதலில் தேவசகாயம் போனார். அப்போது அய்யர், அவனைச் சும்மா கொண்டு வருகிறாயே அடி.. படவாவை! என்று ஆணையிட்டார். பின்னர் தலையாரி மாணிக்கம் என்பவர் தாக்க ஆரம்பித்தார். அதன் பின்னர் விளா மரத்தில் கட்டி வைத்து மீண்டும் தடிக் கம்பால் அடித்தனர். மேலும் மொட்டையடிக்கச் சொல்லி அய்யர் கட்டளையிட்டார். தேவசகாயம் உள்ளிட்ட சில தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கு மொட்டையடிக்கப்பட்டு, தலையிலும், வாயிலும் சாணிப்பால் ஊற்றி அவமானப் படுத்தப்பட்டனர் என்பதை களத் தகவல்கள் மூலமாகவும், 'குடிஅரசு', 'விடுதலை' ஆகிய ஏடுகளின் மூலமாகவும் சான்றுகளை இந்நூலின் ஆசிரியர் கொடுக்கின்றார்.

### சுயமரியாதை இயக்கத்தின் எதிர்வினை

நீடாமங்கலத்தில் தாழ்த்தப்பட்ட தோழர்கள் மீது நடைபெற்ற இக்கொடிய இழிவன்முறையை சுயமரியாதை இயக்கத் தோழர்கள் முதலில் அம்பலப்படுத்துகின்றனர். "ஹரிஜனங்களுக்குக் காங்கிரஸ் மரியாதை" என்ற தலைப்பிட்டு, துண்டறிக்கைகளை வெளியிட்டனர். விடுதலையும் இவ்வன்முறையை ஹரிஜனங்களுக்கு காங்கிரஸ் மரியாதை - பந்தியில் இருந்து சாப்பிட்டவர்களுக்கு அடி! தலைமயிர் மொட்டை! சாணி அபிஷேகம்! தென் தஞ்சை அரசியல் மாநாடு, அலங்கோலம்! என்று தலைப்பிட்டு 03.01.1938-ல் வெளியிட்டது. இந்நிகழ்வை அம்பலப்படுத்தி, வெளி உலகிற்குத் தெரியப்படுத்தியது சுயமரியாதை இயக்கமும், விடுதலையும் தான் என்பதை நூல் ஆதாரத்துடன் பதிவுசெய்கிறது.

'ஹரிஜன மந்திரிக்கும் மேயருக்கும் சவால்' என்ற தலைப்பில் வெளியான தலையங்கம் முக்கியமான ஒன்று. மேலும், அவ்வூரில் இருந்த தாழ்த்தப்பட்ட தோழர்கள் பெரியாரிடம் நேரடியாக முறையீடு அளித்தனர். அம்முறையீடு விடுதலையில் 19.01.1938 முதல் பக்கத்தில் வெளிவந்தது. பி.சாமியப்பன், பி.உத்தராசி, ம.கோவிந்தசாமி, வை.வீரமுத்து, முருகையா, சாமியப்பன், பேச்சிமுத்து ஆகிய தாழ்த்தப்பட்ட தோழர்கள் கையொப்பமிட்டு முறையீடாக அளித்தனர். அம்முறையீட்டின் வாயிலாக அவர்கள் பெரியார் மீது வைத்திருந்த நம்பிக்கையை உணரமுடிகிறது.

"...நாங்கள் இந்த கொடுமையிலிருந்து எங்களை மீட்பதற்குத் தங்களைத் தவிர வேறொருவரும் இல்லையென்றே எண்ணும்படியான நிலைமைக்கு வந்துவிட்டோம். ஆகவே தங்களுடைய வாழ்நாளிலேயே எங்களுடைய விமோசனத்தை அடையும் மார்க்கத்தைக் காண்பிக்கும்படி மன்றாடி வேண்டிக் கொள்கிறோம்." என்று அந்த முறையீட்டில் பெரியாரை கேட்டுக் கொண்டனர். அம்முறையீடு நூலில் 116-ஆம் பக்கத்தில் முழுவதுமாக கொடுக்கப்பட்டுள்ளது.

### தினமணிக்கும் – குடி அரசுக்கும் கருத்துப்போர்

இதன் பிறகு தினமணிக்கும் சுயமரியாதை இயக்க ஏடுகளான 'விடுதலை'மற்றும் 'குடிஅரசு' ஏடுகளுக்கும் வன்கொடுமை நிகழ்வை ஒட்டி கருத்துப்போர் நடந்தது.

03.01.1938-ல் 'விடுதலை'யில் வெளியான செய்திக்கு 'தினமணி' ஏடு 18.01.1938 "சுயமரியாதைக் காரர், புளுகு, தென் தஞ்சை தலைப்பிட்டு வெளியிட்டது. 'தினமணி' வெளியிட்ட மறுப்பைத் தொடர்ந்து 'குடிஅரசு'ம், 'விடுதலை'யும் கருத்துப் போரை தொடுத்தது. மேலும், விடுதலையில் 'புளுகுவது எது, 'தினமணி'யா? 'விடுதலை'யா? என்ற தலைப்பிட்டு கேள்விக்குட்படுத்தியது.

03.01.1938 ஆம் நாள் 'விடுதலை'யில் வெளியிட்ட செய்திக்கு 18.01.1938 வரை அமைதி காத்தது ஏன்? என்றும் இச்செய்தியினால் நேரடியாக பாதிக்கப்பட்ட டி.கே.பி.சந்தான உடையார், பண்ணை ஏஜெண்ட் கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஆகிய இருவரும் அமைதி காப்பது ஏன்? என்றும் 'விடுதலை' கேள்வி எழுப்பியது. 'தினமணி'யுடன் கருத்துப்போர் என்ற தலைப்பின் கீழ் நூலில் பக்கம் 37-45 வரை 'தினமணி' பரப்பிய அவதூறுக்கு 'விடுதலை'யும், 'குடிஅரசு'ம் வெளியிட்ட மறுப்பும் விரிவாக ஆசிரியர் கொடுத்துள்ளார்.

காங்கிரஸ் தரப்பிலும் எதிர்வினைகள் ஆரம்பித்தன. காங்கிரஸில் அன்றிருந்த சில நிகழ்வை மறைக்கவும் மேலும் அவர்கள் அந்த சம்பவம் நடக்காததைப் போல் எதிர்வினை ஆற்றினர். சிலரோ அந்த எதிர்வினைக்கு அதாவது சம்பவம் உண்மை என அறிந்தும் அவர்கள் உடன்பட்டே எதிர்வினை ஆற்றியிருக்கின்றனர்.

"06.02.1938 அன்று நீடாமங்கலத்திற்கு நேரில் சென்று உண்மையை அறிந்து வந்த காங்கிரசின்

சட்டமன்ற செயலாளர் (பார்லிமென்டரி செக்ரடரி) பி.எஸ்.மூர்த்தி 'நீடாமங்கலம் கொடுமை உண்மையே' என்று தஞ்சை ஜில்லா ஆதிதிராவிடர் சங்கம், கருப்பூர் வால்டயர் வாலிபர் சங்கம் என்ற சுயமரியாதை சங்கம் ஆகியவற்றிடம் வெளிப் படையாக தெரிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது"

### அவதூறு வழக்கு

"நீடாமங்கலம் வன்நிகழ்வு தொடர்பான வழக்கைப் பொறுத்த வரையில் டி.கே.பி.சந்தான உடையாரின் வழக்கறிஞர் கொடுத்திருந்த வக்கீல் நோட்டீசைத் தொடர்ந்து 12.02.1938 அன்று திருத்துறைப்பூண்டி மாவட்டத் துணை ஆட்சியர் முகாமில் 'விடுதலை' வெளியீட்டாளர் ஈ.வெ.கிருஷ்ணசாமி, 'விடுதலை' ஆசிரியர் எஸ்.முத்துசாமி பிள்ளை ஆகியோர் மீது மானநஷ்டவழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கில் முதல் எதிரியாக ஈ.வெ.கிருஷ்ணசாமியும் இரண்டாவது எதிரியாக எஸ்.முத்துசாமி பிள்ளையும் சேர்க்கப் பட்டிருந்தனர்."

"இவ்வழக்கு 20.03.1938 ஞாயிறு காலை 11 மணிக்குத் தஞ்சாவூர் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கருணாகர மேனன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது."

"வழக்கு விசாரணையானது தஞ்சை வல்லம் முகாமில் 5,6,7,8 ஏப்ரல் 1938 ஆகிய நாட்களில் தொடர்ந்து நடைப் பெற்றது"

நீடாமங்கலம் வழக்கு குறித்த செய்திகளை அவ்வப்போது 'குடிஅரசு', 'விடுதலை' ஏடுகள் வெளியிட்டு வந்தது. இந்த வழக்கில் டி.கே.பி.சந்தான ராமசாமி உடையார் அளித்த சாட்சியங்களை 'விடுதலை' தொடர்ந்து வெளியிட்டு வந்தது. பின்பு வழக்கு விசாரணை 03.05.1938 அன்று முடிவுக்கு வந்தது. விடுதலை மீது குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. ஒன்றரை மாதம் கழித்து அந்த வழக்கின் மீது மறுவிசாரணையும் 15.06.1938 அன்று முடிந்தது. தீர்ப்பு வழங்கப்பட்டது. விடுதலை மீது அவதூறு வழக்கு போடப்பட்டது.

நீடாமங்கலம் வன்முறை குறித்து தகுந்த சாட்சியங்கள் இல்லை என்று மாஜிஸ்திரேட் சி.கருணாகரமேனன் தன் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். நீடாமங்கலம் வன்கொடுமை பொய்யாக்கப் பட்டது.

"நீடாமங்கல வன்கொடுமை குறித்து இது காறும் தொகுத்துக் கொண்ட கருத்துக்களின் சாரமானது விவாதங்களை எழுப்பும் பல கேள்வி களாக நம் முன் வருகின்றது. இவ்விவாதங்களின் கருத்தியல் நீட்சி, திராவிட இயக்கம், தாழ்த்தப் பட்டோர் ஆகிய இரு தரப்பினரிடையே உள்ள உறவுநிலை குறித்து இன்று நிலவிவரும் - பெரும் பாலும் எதிர்மறை நோக்கிலானதாகவே காண லாகும் - கருத்துப் பகிர்வுகளுக்கு ஒரு வரலாற்றுப் பரிமாணத்தை அளிப்பதாக அமைகின்றது." என்று பக்கம்-87-ல் நூலின் முடிவுரையில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

### தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளின் மௌனம்

மேலும் "மீட்கப்பட்ட மூவருள் ஒருவரான ஆறுமுகத்தை, பெரியார் தன்னுடன் வைத்துக் கொண்டதாகவும் அவருக்குக் காவல்துறையில் அரசு வேலை பெற்றுத் தந்ததாகவும் தற்போது அவரது குடும்பம் சென்னையில் வாழ்வதாகவும் களத் தகவல்கள் (கா.அப்பசாமி, நீடாமங்கலம், 07.03.2011) கூறுகின்றன" என்று பக்கம் 88-ல் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

அதே பக்கத்தில் ஆசிரியர் வன் நிகழ்வு நடைபெற்ற அதன் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அறியப்பட்ட தாழ்த்தப்பட்டோர் தலைவர்களான ரெட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா, என்.சிவராஜ், எல்.சி.குருசாமி, எச்.எம்.ஜெகந்நாதம் போன்றோர் பொதுத்தளத்தில் இது குறித்து ஏதும் பேசாமல் மௌனமாகவே இருந்துள்ளனர்.

தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக அன்றைய காங்கிரஸ் அமைச்சரவையில் பதவி வகித்துக் கொண்டிருந்த வி.ஐ.முனிசாமி பிள்ளை, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரான குழந்தை வேலுப்பிள்ளை நயினார் போன்றோர் வன்முறை நிகழ்ந்ததை மறுத்து, தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான நிலையையே எடுத்திருந்தனர்." என்று நூல் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பக்கம் 89-ல் "இந்நிலையில் தாழ்த்தப் பட்டோரின் பெருந்தலைவர்கள் இவ்வன்நிகழ்வு குறித்து ஏன் பேசாமல் இருந்தனர். அவர்களின் இம்மௌனத்திற்குப் பின்புலமாக விளங்கிய சமூக-அரசியல் கருத்து நிலை யாது? என்ற கேள்விகள் எழுகின்றன." என்று நூலின் ஆசிரியர் ஆ.திருநீலகண்டன் குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட கருத்தின் மூலம் திராவிடர் இயக்கமோ, பெரியாரோ, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்பதும் - பார்ப் பனியத்தை மட்டும் எதிர்த்து பிற்படுத்தப் பட்டோரின் நலனைக் காக்க செயல்பட்டது என்பதும் - பெரும் நிலவுடைமையாளரையும், பிற்படுத்தப் பட்டோரையும் பெரியாரோ, திராவிடர் இயக்கங்களோ எதிர்க்கவில்லை என்பதும் - திராவிடர் இயக்கங்களை பிற்படுத்தப்பட்டோரின் இயக்கமாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான இயக்கமாகவும் சித்தரித்து கூறிவரும் - சில கூட்டங்களின் வாதங்களை இந்நூல் தகர்த்து விட்டது.

**புத்தகத்தின் விலை: ரூ175,**
**கிடைக்குமிடம்:காலச்சுவடு பதிப்பகம்,**
**கே.பி.சாலை, நாகர்கோவில்-629001**

தாராபுரம் பூங்கொடி



# அறிவியலுக்கு எதிரான ‘சமுதாய வளைகாப்புகள்’

## கருவுற்றோருக்குத் தேவை வளையல்களா? - விட்டமின்களா?

எனது நெருங்கிய தோழி ஒருத்தி மகளுக்கு வளைகாப்பு என்று எனக்கு அழைப்பு விடுக்க வந்திருந்தாள். பொண்ணு கல்யாணத்திற்காக வாங்கிய கடனையே இன்னும் முழுசா அடைக்கலே அதுக்குள்ள வளைகாப்புச் செலவு, பிரசவச்செலவு என்று கண்ணைக்கட்டுது, கைல காசில்லை. வளைகாப்பு பண்ணவேண்டாம் வீட்டளவாவது பண்ணிட்டுவிடலாம்னு பார்த்தா மாப்பிள்ளை வீட்டில் ஊர் அழைச்சு பண்ண ணும்னு சொல்றாங்க, அக்கம்பக்கம் இருக்கறவங்க அதுக்கும்மேல, வாயிம், வயிருமா இருக்கற புள்ளைக்கு வாய்க்கு ருசியா வக்கனையா கட்டுச் சோறு (கலவைச்சோறு) செஞ்சுபோட்டு தெம்பு தேத்தி விடனும் அதுமட்டுமில்லாம வயிற்றில் கரு இருக்கும் போதே அனைத்து வகையான சுவையும் பழக்கப்படுத்த வேண்டும் அதைவிட்டுட்டு இதில் போய் காசுமிச்சம் பண்றேன்னு சொல்றேன்னு வாய்க்கு வந்தபடி என்னை பேசுகிறார்கள் என்று புலம்பினாள்..

புள்ளையக் கட்டிக்கொடுத்துட்டா புள்ளை நமக்குச் சொந்தமில்லை, புகுந்த வீட்டுக்குக்தான் சொந்தமுன்னு வக்கனையாப் பேசறாங்க... ஆனால் வளைகாப்புச் செலவு, பிரசவச்செலவு மட்டும் பிறந்த வீட்டில் தான் பண்ணணும்னு சொல்றாங்க என்ன நியாயமோ இது. மேற்கொண்டு கடன் வாங்க விருப்பம் இல்லை. இருந்தாலும் என்ன பண்றது மற்றவர்கள் கட்டாயத்துக்காகப் பண்ண வேண்டியது இருக்கே என்று அங்கலாய்த்தாள்.

வளையல் சத்தம் வயிற்றில் இருக்கும் கருவுக்கு கேட்டுக்கொண்டிருப்பது நல்லது. கருவுற்றிருக்கும் பெண்ணின் ஆரோக்கியத்திற்காக, குழந்தையின் நலனிற்காகத்தான் வளைகாப்பு என்று அவர்கள் எடுத்துரைத்த விசயங்கள் முற்றிலும் தவறு என்று கூறினேன்.

அப்படியா என ஆச்சிரியமாகக் கேட்டாள். ஆமாம், அவ்வளவாக அறிவியல் வளர்ச்சி இல்லாத பழங்காலத்தில் குழந்தைப் பிறப்பு என்பது தற்போது இருப்பது போல எளிதான விஷயம் அல்ல. ஒரு பெண் பிரசவத்திற்குப் பின் மீண்டு வருவதே பெரிய விஷயம். பிரசவத்தில் நிறைய மரணங்கள் நிகழும். திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இல்லாத காலகட்டத்தில் கருவுற்றிருக்கும் பெண்ணுக்குத் தைரியம் கொடுக்கும் விதமாக குழந்தைப் பெற்ற பெண்கள் அனைவரும் ஒன்றுக் கூடி நாங்கள் பிரசவத்தைக் கடந்து உயிருடன் வந்தது போல நீயும் மீண்டு வருவாய் என்று வளையல்களை அணி வித்திருக்கலாம். பிழைப்பதே பெரு விஷயம் ஆதலால் புதுத்துணி, பலகாரம் போன்றவற்றை கொடுத்திருக்கலாம்.

### ஆரோக்கியத்திற்கு எதிரான வளைகாப்பு

ஆனால், அறிவியல் வளர்ந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில்கூட வளைகாப்பு நடத்துவதற்கு ஆணாதிக்கம்தான் காரணம். தான் தகப்பன் ஆகிவிட்டதையும், தன் குடும்பத்திற்கு ஒரு வாரிசு வருகிறது என்பதையும் ஊருக்கு ஒளிபரப்புவதற்கே இதைச் செய்கின்றனர். ஊட்டச்சத்து நிபுணர்கள், கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு புரதச்சத்து, கொழுப்புச்சத்து, இரும்புச்சத்து, சுண்ணாம்புசத்து, விட்டமின்கள் எல்லாம் கலந்த சரிவிகிதச் சமச்சீர் உணவையே பரிந்துரைக்கின்றனர். இதற்கு முற்றிலும் புறம்பாக வெறும் மாவுச்சத்தை (Carbohydrates) உள்ளடக்கிய உணவான கலவை சாதத்தின் மூலமாகக் கிடைக்கும் கலோரிகள் உடல் எடையை வேண்டுமானால் கூட்டும் வேறு எந்த பயனும் தாய்க்கோ, சேய்க்கோ இல்லை. இன்னும் சொல்கிறேன் கேள்...

அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஒரு ஆரோக்கியமான தாயின் உடல்தான் ஆரோக்கியமான குழந்தைக்கு அஸ்திவாரம் என்று கூறுகிறார்கள். அவ்வாறே அறிவான, ஆரோக்கியமான குழந்தை பிறக்கவேண்டும் என்று விரும்பும் பெண்கள் ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தை கருவுறத்தீர்மானிக்கத் தொடங்கிய கணத்திலிருந்து தொடங்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

ஏனென்றால் இந்தியப்பெண்களின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்துக் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 80 சதம் கருவுற்றிருக்கும் பெண்கள் இரும்புச்சத்துக் குறைபாடால் உண்டாகும் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். பால்கொடுக்கும் தாய்மார்களும், வளர் இளம்பெண்களும் இரத்தச் சோகையால் அவதியுறுகின்றனர்.. இந்தியப் பெண்கள் இந்திய ஆண்களைவிட 13 சதம் புரதச்சத்து குறைந்தும் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடனும் காணப்படுகின்றனர். வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உண்டபின் உணவு எடுத்துக் கொள்வதும் இதற்கொரு காரணம். இதைத் தவிர்க்க வேண்டுமானால் பெண்கள் கருவைப்பற்றியும் கருவின் வளர்ச்சியில் உணவின் பங்களிப்பு பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும்.

### கர்ப்ப கால உணவுகள்

ஒரு பெண்ணின் வயிற்றில் கரு 40 வாரங்கள் நீடிக்கும். இந்த கருவுற்றிருக்கும் காலகட்டத்தை மூன்று கட்டங்களாக அதாவது முதல் மூன்றுமாதம், இரண்டாவது மூன்றுமாதம், மூன்றாவது மூன்று மாதம் என பிரிப்பார்கள். மூன்று மாதங்கள் என்பது 12 - 13 வாரங்கள் உள்ளடங்கியதாக இருக்கும். இந்த ஒவ்வொரு கட்டத்திலும் கருவுற்றிருக்கும் பெண்ணின் உடலில் ஏற்படும் மாற்றங்கள், எடுத்துக் கொள்ளவேண்டிய உணவுமுறைகள், இந்த உணவை எடுத்துக் கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் தற்போது பார்க்கலாம்.

முதல் மூன்று மாதங்கள் உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களால் அசதி, அதீதசோர்வு, லேசான தலைசுற்றல் இருக்கும். ஒரு சிலருக்கு 45 நாட்கள் அல்லது இரண்டு மாதம் கூட வாந்தியும் இருக்கும். அவர்கள் மட்டும் எளிதில் சீரணமாகக் கூடிய உணவுகளையும் மற்றவர்கள் சரி விகித சமச்சீர் ஊட்டச்சத்து உணவை உட்கொள்ள வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் கருவுக்கு இதயம், நுரையீரல், கை, கால், மூளை, தண்டுவடம், மணிக்கட்டு, விரல்கள், எலும்பு, உள்காது, சதை, பல் முளைக்க ஏதுவாக எகிறு (Buds) ஆகியவை வளரும். மனிதமூளை முழுக்கக் கொழுப்பால் ஆனது. மூளை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் கொலின் எனும் சத்து எளிதாக கிடைக்கக்கூடிய உணவு முட்டை. அன்றாட உணவில் 2 முட்டை கண்டிப்பாக இடம் பெறவேண்டும். சால்மன்வகை மீன்கள், மாட்டிறைச்சி, பன்றிமாமிசம், காய்கறிகள், பழங்கள், தானியங்கள் மற்றும் யோகர்ட் ஆகியவை இருக்கவேண்டும்.

### இரண்டாவது மூன்று மாதங்கள்

ஹார்வார்டு மெடிக்கல் ஸ்கூல் அறிக்கைப்படி 4 மாதம் தொடங்கி 6 மாதம் வரை மீன்உணவுகளை குறிப்பாகப் பாதரச அளவு கம்மியான மீன் உணவுகளை உட்கொண்ட தாய்மார்களின் 6 மாதக் குழந்தைகள் அதிகளவு மூளைவளர்ச்சி பெற்றிருந்ததாக தெரிவிக்கின்றனர்.

கருவுற்றப் பெண்களுக்கு விட்டமின்- டி குறைபாடு இருந்தால் பிறக்கும் குழந்தை மூளை செயல் திறன் குறைந்து காணப்படும் என்று கூறுகின்றனர். மீன் உணவுகளில் குறிப்பாக சால்மன் வகைமீன்கள் இயற்கையிலேயே (omega 3 fatty acids) மற்றும் அபிரிதமான விட்டமின் நிறைந்த உணவு இருப்பதால் மூளைவளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

6 வது மாதவாக்கில் பித்தப்பையை அழுத்துவதால் வாயுப்பொருட்களை மட்டும் சற்றே குறைத்து உண்ணவேண்டும். மற்றபடி சர்க்கரை வல்லிக்கிழங்கு, முட்டை, கீரைவகைகள், மாட்டு இறைச்சி, பன்றிஇறைச்சி, சிக்கன், சீஸ், தானியங்கள் போன்றவை இருக்கவேண்டும். குழந்தையின் சிறுநீரகம் வேலை செய்யத் தொடங்கும். கரு மிகத் துடிப்பாக இருக்கும் தூங்கவும், விழிக்கவும் ஆரம்பிக்கும். மூளை முழுவீச்சில் வளரத் தொடங்கும், நுரையீரல் முழுவதுமாக வளர்ந்த நிலையை அடைந்திருக்கும்.

### மூன்றாவது மூன்று மாதங்கள்

ஒரு குழந்தையின் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் மூளையின் செயல்திறனுக்கான அஸ்திவாரமே இந்தக்கடைசி மூன்றுமாதத்தில் தான்கட்டமைக்கப்படுகிறது. பிரசிவிப்பதற்கு ஏதுவாக குழந்தையின் தலைகீழ் நோக்கி திரும்பத் தொடங்கும். குறைந்த கொழுப்பு உணவுகளை பிரசவகாலத்தில் உட்கொள்ளும் பொழுது எடை குறைவான குழந்தை பிறப்பதற்கும், எளிதில் நோய் தொற்றக் கூடியவகையிலும், சிலசமயங்களில் கருவிலேயே கலைவதுமான ஆபத்துகள் அதிகம்.

அதனால் கடைசி மூன்று மாதங்களில் மாட்டுஇறைச்சி, பன்றிஇறைச்சி, சிக்கன், விட்டமின் பி, முட்டை, தானியங்கள், காய்கறி, கீரை மற்றும் பழங்கள் ஆகியவை இணைந்து உட்கொள்ள வேண்டும். ஊட்டச்சத்து நிபுணர்கள் கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதமாதம் பரிந்துரைக்கும் உணவு முறைப் பட்டியல் இது. ஆனால், இந்தியாவிலோ ஒவ்வொரு உணவையும் கடவுளோடும், மதத்தோடும் இணைக்கின்றனர்.

இந்துக்களுக்கு மாட்டிறைச்சியை உண்ணக் கூடாது என்றும், “பசு நம்தாய் என்றும் போதிக்கின்றனர். மீன் உணவை மச்ச அவதாரமாகவும், பன்றி இறைச்சியை வராக அவதாரமாகவும் கூறுகின்றனர். நாங்க பெருமாள் கோயிலுக்கு முத்திரை போட்டிருக்கோம். அசைவ உணவு உட்கொள்ளக்கூடாது என்றும் பலபேர் சொல்வதை பார்க்கிறோம்.

இஸ்லாமியர்களும் இவ்வாறே. தோலைத் தனியாக பிரிக்க முடியாத, மனிதக் கழிவுகளை

உண்ணும் பன்றி மாமிசத்தை உண்ணமாட்டோம் என்று உணவை மதத்தோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். இன்னும் சிலர் சிக்கன் சாப்பிட்டால் உடம்பு சூடாகிவிடும். அசைவ உணவு ஜீரணம் ஆகாது. ஓவர் கொழுப்பு சாப்பிட்டால் குழந்தை வயிற்றுக்குள்ளேயே ரொம்ப ஊறிடும் (அதாவது எடை கூடிவிடும்) என்று பல வியாக்கியானங்களைக் கூறி அசைவ உணவை எடுத்துக்கொள்ள விடுவ தில்லை.

ஆனால், இந்து, முஸ்லீம், கிறித்துவம் என அனைத்து மதத்தினருமே கருவுற்றிருக்கும் பெண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவே முன்னோர்கள் வளைகாப்பு செய்யச் சொன்னார்கள் "முன்னோர்கள் ஒன்றும் முட்டாள் இல்லை" என்று கூறிக்கொண்டு புரதச்சத்து உணவுகளையும், ஊட்டச்சத்து உணவுகளையும் தவிர்த்த மாவுச் சத்தை மட்டுமே பெரும்பாலும் உள்ளடக்கிய கலவை சாதத்தை ஏழாம் மாதத்தில் 'வளைகாப்பு' எனும் பெயரில் கொடுத்துக் கொண்டிருக் கின்றனர்.ஆக ஆரோக்கியத்திற்காக என்ற கூற்று அடியோடு பொய்த்துப்போனதைக் கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் எடுத்துரைக்கிறது.

இந்தியப் பெண்களின் மகப்பேறு இறப்புவிகிதம் (Maternal Mortality) ஒரு மணிநேரத்திற்கு 5 பெண்கள் இறப்பதாகவும், பிரசவிக்கும் 1,00,000 பெண்களில் 174 பேர் இறப்பதாகவும் தெரிவிக்கிறது. மேலும், உலக மகப்பேறு இறப்பு விகிதத்தை ஒப்பிடுகையில் இந்தியாவில் மட்டும் 17 சதம் ஆக இருப்பதாகவும், ஒவ்வொரு வருடமும் 45,000 பெண்கள் பிரசவ சமயத்தில் இறப்பதாகவும், உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

### வளையல்களைவிட விட்டமின்களேஅவசியம்

ஏற்கனவே இரத்தச் சோகையால் பாதிக்கப் பட்டிருக்கும் பெண்கள் பிரசவிப்பதற்குப்பின் ஏற்படும் அதீத இரத்தப்போக்கினால் உயிரிழப் பதாகத் தெரிகிறது. இந்தியப் பெண்களின் நிலைமை, மகப்பேறு விசயத்தில் இவ்வாறிருக்க - உணவை மதத்துடன் சம்பந்தப்படுத்தாத - வளைகாப்பு நடத்தி வளையல் அணிவிப்பது போன்ற மதரீதியான சடங்குகள் நடைபெறாத அமெரிக்க ஐக்கிய நாடுகள்(United states) மகப்பேறு இறப்பு விகிதத்தை 99 சதம் குறைத்து உள்ளனர்.

ஆரோக்கியமான உணவுமுறை, நல்ல சுகாதாரம், பொருளாதாரச் சூழலை மேம் படுத்துதல், மன அழுத்தம் இல்லாத வாழ்க்கைமுறை மூலம் இந்த நிலையை அடைந்துள்ளனர். அதனால் வளையல்களைவிட விட்டமின்கள் அவசியம். கலவைச் சாதத்தைவிட சரிவிகிதச் சமச்சீர் உணவு முறையை கருவுற்ற உடனேயே ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றியும் உன் பொண்ணுக்கு முதலில் எடுத்துச் சொல்லி ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை இனிமேலாவது தொடங்கச் சொல்லு என்று தோழிக்கு எடுத்துரைத்தேன். ஆனால், அரசாங்கத்துக்கு யார் எடுத்துரைப்பது???



மகப்பேறு முன் பராமரிப்பு மருந்து,(ANC, Anti natal checkup) மாதாந்திர செக்கப்போடு சேவையை அரசாங்கம் நிறுத்திக்கொண்டது.

**பெற்றோரின் 60 சதம் மரபணுக்கள்தான் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு வித்திடும் என்பதால் அகமணமுறை எனும் நெருங்கிய இரத்த சம்பந்தமுள்ள உறவு முறைக்குள் திருமணம் செய்யக்கூடாததன் அவசியத்தையும், தாய், சேய் ஆரோக்கிய மேம்பாட்டுக்கான வழிமுறைகள், மன அழுத்தம் ஏற்படாதவாறு தற்காத்துக் கொள்வதற்கான கவுன்சிலிங், சுகாதாரமான வாழ்க்கைமுறை போன்றவற்றை வலியுறுத்து வதை விட்டுவிட்டு சமுதாய வளைகாப்பு நடத்திக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.**

ஹரீஷ் கமுகக்குடி மாரிமுத்து, இலண்டன்



# இன இடர் நீக்கும் திராவிட அரக்கர் !

முனைவர் செல்வக்குமார் இராமசந்திரன்! இந்தப் பெயர் எவ்வளவு பரிச்சயமோ தெரியாது. ஆனால் இணைய உலகில் **'வினையூக்கி'** என்றால், 'ஓ! அவரா!' என்றே வியப்புடன் விளிப்பர். வினையூக்கியை கண்டதில்லை ஆனால் அவரின் எழுத்துகள் எங்களுக்குள்ளே பகுத்தறிவை, சமூக நீதியை உசுப்பிவிட்டது என்று பலரும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கலாம். வினையூக்கியை காணும் வாய்ப்பு கிடைத்தால் யார்தான் வாய்ப்பை நழுவ விடுவார்?

லண்டன் லிவர்பூல் ஸ்ட்ரீட் இரயில் நிலையத்தில் இரண்டு மணி நேரம் அவருடன் உரை யாடும் வாய்ப்புக் கிடைத்தது இரண்டு மணி நேரமும் எப்படிப் போனது என்றே தெரியவில்லை. தகவல் தொழில் நுட்பத் தகவல்கள், பொது அறிவுத் தகவல்கள், சமூக நீதிக் கருத்துகள், தர்க்க முறைகள், திட்டமிடல், செயலாற்றல், எதிர்காலத் திட்டங்கள், நகைச்சுவைத் துனுக்குகள் என சுவாரசியமான இரண்டு மணி நேரமாக அமைந்தது.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பது உலகத் தத்துவம். இணைய உலகம் வலைப்பூவில் தொடங்கி, ஆர்க்குட்டில் வளர்ந்து, பேஸ்புக்கில் பல்கி, டுவிட்டரில் பெருகி வளர்ந்து வருகிறது. இவை அனைத்திலும் தடம் பதித்தவர் 'வினையூக்கி'. இது எதைக் குறிக்கிறது என்றால், சமூக மாற்றத்திற்கான தேவைக்கு ஏற்ப புதிய மாற்றத்துக்குத் தகவமைத்துக் கொள்ளும் அரிய பண்பை கொண்டவராகக் 'வினையூக்கி' வழிகாட்டுகிறார்.

தடுக்கி விழுந்தால் சாப்ட்வேர் இஞ்சினியர் என்பது இன்றைய தமிழ்நாட்டின் நிலை. அப்படிப் பட்ட நன்னிலை அடைந்ததற்கு தமிழ்நாட்டின் சமூக நீதி தத்துவம் ஒரு காரணம். ஆனாலும் ஒருபடி மேலே போய், மேற்படிப்பு படிப்பவர்கள் குறைவு தான். அதையும் தாண்டி ஆராய்ச்சி மேற்படிப்பு படிப்பவர் மிகச் சொற்பம். அந்த வகையில் 'வினையூக்கி' செல்வா அவர்கள் தமிழ் நாட்டில் தியாகராஜர் கல்லூரியில் பொறியியல் பட்டம் பெற்றார், அடுத்ததாக ஸ்வீடனில் முதுகலைப் பட்டம் பெற்றார். பின்னர் இத்தாலியில் உள்ள ரோம் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். வினையூக்கியின் தந்தையார் அஞ்சல்துறையில் கிளார்க்காக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை' என்பதற்க்கேற்ப 'வினையூக்கி' முனைவர் ஆகி பெருமைப்பட வைக்கிறார்.

தந்தை பெரியார் அவர்கள், 'நன்றி என்பது பயன் அடைந்தவர்கள் காட்ட வேண்டிய கடமை; உதவி செய்பவர்கள் எதிர்பார்ப்பது சிறுமைக் குணமே ஆகும்.' என்பார்.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்'

'வினையூக்கி' அவர்கள் தன் முனைவர் பட்டப்படிப்புக்கான ஆராய்ச்சியில், தன் நன்றியாக தந்தை பெரியாருக்கு, பேரறிஞர் அண்ணவுக்கு, கலைஞர் கருணாநிதிக்கு, சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் ஆகியோருக்கு காணிக்கையாக செலுத்தி இருப்பது சிறப்பான செயலாகும். ஆம்! 'நன்றின் பால் உய்ப்பது அறிவு', நன்றியின் பால் உய்ப்பது பேரறிவுதானே!

ரோம் பல்கலைக் கழகத்தில் ஹானர்ஸ் தேர்ச்சியுடன் ஆராய்ச்சி படிப்பை முடித்த 'வினையூக்கி' தற்பொழுது வடகிழக்கு இங்கிலாந்தில் உள்ள சண்டர்லாந்து பல்கலைக் கழகத்தில்(The University of Sunderland) ஆராய்ச்சி யாளராக உள்ளார். பல்கலைக்கழகப் பணிக்கு அப்பாற்பட்டு அறிவியல் மருத்துவத்திற்கு ஆதரவாகப் பரப்புரை செய்ய வேண்டிய தகவல் மென்பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் இரண்டை தொடங்கி இருக்கிறார்.

அய்ரோப்பாவில் கணினித் துறையில் சிறப்பாகப் பங்காற்றிய பத்தே பத்து மாணவர்களுக்கு மட்டும் கூகிளின் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. அந்தப் பத்து நபர்களில் 'வினையூக்கி' அவர்களும் ஒருவர். பின்னர், அவரின் திறமையைப் பாராட்டி காந்தி விருதும் வழங்கப்பட்டுள்ளது.

'வினையூக்கி' அவர்கள் சிறுகதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் உள்ளவர். மேலும் தன் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட செல்வாவிற்கு அவர் மனைவி விஜிதான் தனது வாழ்வின் வினையூக்கி என்பதில் பெருமிதமுண்டு. பொருளாதார தன்னிறைவு பூர்த்தி அடைந்தவுடன் ஐக்கிய முடியரசு அரசியலில் ஈடுபட்டு இங்கிலாந்து பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்பது வினையூக்கியின் திட்டம்.

தமிழ்ச் சமூக இணைய ஊடக வெளியில் கிளிமூக்கு அரக்கர்களின் ஒருங்கிணைப்பாளராக செயற்படும் 'வினையூக்கி', விரைவில் 'கிளிமூக்கு அரக்கன்' மாத இணைய இதழை இங்கிலாந்தில் இருந்து வெளியிட ஆயத்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். திராவிட எண்ணம் கொண்டவர்கள் எடுக்கும் முன்னெடுப்புகளை கைத்தட்டி ஆதரிப்பவர்கள் அந்த முன்னெடுப்புகளுக்கான நேரம் அதன் நேரிடை பண மதிப்பை உணர்ந்து பொருளாதார புரவலர்களாகவும் மாற வேண்டும் என்று கருதுகிறார். அரக்கர்கள் எடுக்கும் முன்னெடுப்புகளுக்கு பொருளாதார புரவர்களின் ஆதரவு பெருகவேண்டும்.

"மனிதனின் மனமும் மதமும் அறிவியலாக மட்டுமே இருக்க வேண்டும்", என்பது வினையூக்கியின் கருத்து.

"எந்த ஒரு மனிதருக்கும் சமூக நீதிப் பார்வையும், தன் தாய்மொழிப் பற்றும், உலக மொழிகள் ஒன்றில் அறிவும் பெறும்போது, இந்த உலகமே தழைத்தோங்கும்", எனும் விசாலப் பார்வையால் வியக்க வைக்கிறார் 'வினையூக்கி'.

"எந்த ஒரு மனிதருக்கும் வெற்றி பெற வெண்டும் எனும் வேட்கையும், சமூக நீதி சார்ந்த சூழலும், சிறிது பயிற்சியும் கொடுத்தாலே போதும், அந்த மனிதர் தன் இயல்பாகவே தான் தேர்ந்தெடுத்த துறையில் நிச்சயம் வெற்றியாளராக பிரகாசிக்க முடியும்", என்று உறுதியாக நம்புகிறார் 'வினையூக்கி'.

'வினையூக்கி' அவர்களின் தத்துவத்திற்கு முனைவர் செல்வக்குமார் ராமச்சந்திரன் அவர்களே ஒரு நற்சான்றுதானே!

**தோழர் அம்பேத்கர் அவர்களால்**

# மனுசாஸ்திரம்

**எரிக்கப்பட்ட நாள் - 25.12.1927**

கவிஞர் தமிழ்மன்னன்
திண்டுக்கல்

# ஆரியப் புல்லரின் அழிம்புகள் ஒழிப்போம்!

ஆண்டாண்டு காலமாய் ஆதிக்க வர்ணத்தார்
அடக்கிட சாட்டை எடுத்தார் - நம்மை
அடக்கிட சாட்டை எடுத்தார் - அது
தீண்டாமை என்பதாம் செகமெங்கும் பரப்பவே
சிந்தையில் கேட்டை விதைத்தார் - நம்
சிந்தையில் கேட்டை விதைத்தார்.

உடலுழைப்பு கொள்ளவும் உளம்வருந்திச் செல்லவும்
ஒருவகை சாதி படைத்தார் - சம
உரிமையாம் நீதி உடைத்தார் - அவர்
கடமையே வலுத்தவர்க்(கு) அடிபணிந்து நடப்பதாய்
'கடவுளே' ஆணை கொடுத்தார் - என்று
கதைசொல்லி வாழ்வு கெடுத்தார்.

காலிலே பிறந்தவன் கல்வியும் கற்பதா?
காய்சினங் கொண்டே எழுந்தார் - நாட்டின்
காவலன் காதில் மொழிந்தார் - அவனை
'நூலிலே' கட்டித்தம் சொற்படி நடத்தியே
நுவலருங் கொடுமை புரிந்தார் - சாதீ '
நோயிலே நம்மை எறிந்தார்.

பழந்தமிழ் மக்களைப் பஞ்சமர் என்றிட்டார்
பல்வகை பேதம் அமைத்தார் - கொடிய
படிநிலை வேதம் சமைத்தார் - சாதிச்
சழக்கினைப் போற்றியே சண்டைகள் மூட்டியே
தமிழரின் வீழ்ச்சி வகுத்தார் - மூடச்
சடங்கினால் தாழ்ச்சி தொகுத்தார்.

ஆரியப் புல்லரின் அழிம்புகள் கண்டும்நாம்
அடங்கியே செல்லல் நன்றோ? - திமிர்
அடக்கியே வெல்லல் என்றோ? - இனிச்
சேரியார், ஊரினர் திரளுவோம், மனுநெறியைத்
தீக்கிரை யாக்கி அழிப்போம்! - தமிழ்த்
தேசம் உண் டாக்கிச் செழிப்போம்!



தேவகி




# கணவனும், மாமியாரும் வெளக்கமாத்தத்தான் கையிலெடுப்பார்கள்!

காட்டாறு இதழின் சார்பாக Boycott Kitchen, Boycott Cooking என்ற முழக்கம் கடந்த மார்ச் மாதம் முதல் பல வழிகளில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இதை மக்கள் எப்படித்தான் பார்க்கிறார்கள் என்று அறிய, சிலருடன் கலந்துரையாடினேன். மாமியார்கள், அம்மாக்கள், பிள்ளைகள், என மூன்று தலைமுறையிடமும் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் பெரும்பாலானோர் கூறிய கருத்துகளில் உள்ள ஒற்றுமையின் சுருக்கமான வடிவம்தான் இது.




“கலச்சாரம், பாரம்பரியத்தை நிறுத்தக் கூடாது. தாய்மாமன் உறவு என்றென்றும் வேண்டும். குழந்தைக்குக் காதுகுத்தி அழகு பார்க்க வேண்டும். உறவுகளில் நெருக்கம் உண்டாகவும், பணம், பொருள் சேர்ப்பதற்கு இவ்விழா வேண்டும். இவ்விழா தொழிலாக ஆக்கவேண்டாம் என்றால். அவரவர் விருப்பம்போல் எளிமை யாகவோ, பெரிய விழாவாகவோ வைத்துக்கொள்ளலாமே தவிர, நிறுத்த முடியாது.” என்றனர் சிலர்.

“ஆணுக்கும்தானே காதுகுத்துகிறார்கள்? இங்கு இருந்துதான் அலங்காரம் தொடருது என்றால் ஆணுக்கும் தானே அலங்காரம் தொடரவேண்டும். ஆண்கள் அலங்காரம் பண்ணிக் கொள்வது இல்லையே.?

“காது குத்துவதில் அறிவியல் இருப்பதாகவும், அந்த அறிவியலின்படி அனைவரும் காது குத்த வேண்டும் என்பதற்காக குலதெய்வக்கோவிலில் மொட்டையடித்துக் காதுகுத்த வேண்டும் என்று சொல்லி வைத்தது நடைமுறையாகிவிட்டது” என்று கூறுகிறார்கள்.




பள்ளிக்கல்வியிலிருந்தே பாலியலையும் ஒரு பாடமாகக் கற்பி!

“அய்யய்யோ!

என் மகள் டியூசன் படிக்கும் இடத்தில் சில பெண் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒரே ஒரு பையன் மட்டும் படிக்கிறான். அதனாலயே நான் அவளை நிறுத்திடலாமுன்னு யோசிக்கிறேன். இப்போ காலம் கெட்டுக்கிடக்கு பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நம்ம காலச்சாரம், பண்பாட்டுக்கு இதெல்லாம் ஒத்துவராது. அப்புறம் ஆண்களுக்கு மூளையில் ஏதோ ஒரு திரவம் சுரக்குதாம். அது பெண்களை கவரத்தூண்டுதாம். அதனால பயமா யிருக்கு, சிறு வயதில் மட்டும் சாத்தியமாகலாம் வயது வந்த பின்பு கூடவே கூடாது.” என்ற பதட்டம்தான் மேலோங்கி உள்ளது.

இன்னும் சிலர் கண்டிப்பாக வரவேற்க்க வேண்டியதுதான் என்றும் சிறு வயதிலிருந்தே ஒன்றாக அமர்ந்தால் சகஜமாக பழக. சமத்துவம் தோன்ற வாய்ப்பாக இருக்கும் என்றும் கூறு கின்றனர்.





## பெண்களை இழிவு படுத்தும் பூப்புனித நீராட்டு விழாக்களைத் தடைசெய்!

"இதெப்படி பெண்களை இழிவு படுத்தும்? சின்னப்பிள்ளையா இருந்தவ, பெரிய மனுசியானது. சந்தோசமான விசயம்தான? அத விழாவாக் கொண்டாட வேண்டாமா? ஒரு பெண் திருமணத்துக்குத் தாயாராகி விட்டாள் என்று மாமன்முறை உள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அறிவிக்கும் அறிவிப்பாக இது தொடங்கப்பட்டது என்று சொல்வார்கள். இது பெண் முதல்முறை தீட்டாவது. இதை இப்படிச் செய்துதான் தீட்டுக் கழிக்க வேண்டும். அப்புறம் விழாவாக நடத்தினால் மொய்ப்பணம், பொருட்கள் சேரும். எது எப்படியிருந்தாலும் நமது பாரம்பரியம், கலாச்சாரம் இது தான். இது எப்படிப் பெண்னை இழிவு படுத்தும்?" என்கின்றனர் பெண்களைப்பெற்ற அம்மாக்கள்.

சில கல்லூரிப் பெண்களோ, "எங்களுக்கு ரீசன் எல்லாம் தெரியாது. பூப்பர்ட்டி ஃபங்சனில் நாங்க தான் (நான்) ஹீரோயின். அது எனக்கான ஃபங்க்ஷன். அது என்னை முன்னிலைப்படுத்துகிறது. எனக்குச் சந்தோசமாக இருக்கிறது." என்றளவில் மட்டும் பார்க்கிறார்கள்.

சிலர், "இந்தக்காலத்தில் இதை பப்பளிசிட்டியாக்க வேண்டிய அவசியமில்லை, அசிங்கமாக உள்ளது" என்றும் கூறினர்.




"ஏம்மா, பெண்களுக்குன்னு தனிப்பட்ட சந்தோசம்னா இது ஒன்றுதான், பொதுவா வெளியில் போகும்போது பூ வச்சு, பொட்டுவச்சு, நகையெல்லாம் மாட்டி, பட்டுபுடவை கட்டி, மங்களகரமா போனாதான் புகுந்த வீட்டில் சந்தோசமா இருக்கிறதா அர்த்தம் கணவன் நல்லா பார்த்துக்கிறதா அர்த்தம் அப்படியிருக்கிறதுதான் ஒரு குடும்பப்பொண்ணுக்கு அழகு, இலட்சுமிகரமா இருக்கும்."

"நம்ம கலாச்சாரத்தில பொம்பளன்னா இப்படித்தான் இருக்கனும்னு இருக்கு. அதை மாத்தக் கூடாது. இதெல்லாம் இல்லாம இருந்தா, பார்க்கிறவர்களுக்கு இந்தக் குடும்பம் ரொம்ப வறுமையில் இருக்கு என்று கேவலமாகப் பார்ப்பாங்க."

"ஒரு பெண் தன்னை அழகாகக் காட்டிக் கொள்ள விரும்புவது அவளுடன் பிறந்த குணம் அவளுடைய அந்தச் சுதந்திரமான ஆசை, கலாச்சாரத்தின் ஒரு அம்சம்" என்று சத்துகுருவே (ஜக்கிவாசுதேவ்) சொல்லியிருக்கிறார்.

"ஆனா இப்பவெல்லாம் நிறைய மாறிட்டாங்க.. இந்த மாதிரி அலங்காரத்திற்க்கு பதில், வேற மாதிரி தன்னை மார்டனா மேக்கப் பண்ணிக்கிறாங்க." என்று அம்மாக்கள் கூற ..

இளம்வயதுப் பெண்களோ, தன்னை அழகு படுத்துவது தனக்குப் பிடித்திருக்கிறது. மேலும் இது தங்களை மெருகூட்டுவதாகவும், "அலங்காரம் இல்லாமல் வாழ்வது ஒரு வாழ்க்கையா? இதில் எவ்வளவு ஸ்டைல் இருக்கு தெரியுமா? ஒவ்வொரு ஃபங்ஷனுக்கும் தனித்தனியாக ட்ரஸ் கோட் இருக்கு" என்று மிக ஏக்கத்துடன் கூறுகிறார்கள்.




Co-Hostels or Unisex Hostels

புதுடெல்லி JNU, AIMS, போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் நடைமுறையில் உள்ள இருபால் பொதுவிடுதி முறையை பள்ளி - கல்லூரிகள் அனைத்திலும் நடைமுறைப்படுத்து !

பலர் முகச்சுழிப்புடன், "இது சரிப்படாது. கல்லூரி, விடுதி இரண்டிலும் ஆண், பெண் சேர்ந்து இருப்பது இன்றைய சுழலில் சரிவராது. இது ஃபாரின் கிடையாது. நம்மநாடு கலச்சாரம்-பண்பாடு உள்ள நாடு, அது மட்டுமில்லை. பாலியல் பிரச்சனை அதிகமாக நடக்குது பொம்பிளைப் பிள்ளைக்குப் பாதுகாப்பு வேணும். கல்லூரி வரைக்கும் கூட சேர்ந்து படிக்கலாம், விடுதி வேண்டாம்." என்கிறார்கள்..

சிலர், "தொடக்கக்கல்வியில் இருந்தே ஆண்-பெண் சகஜமாகப் படித்து வளர்ந்தால், இன்று கல்லூரியில் விடுதி சரி. தொடக்கக் கல்வியில் இருந்து பிரித்துவிட்டு, ஆண்-பெண் சகஜமாகப் பழக

விடாமல் வளர்த்த சமூகத்தில், கல்லூரி விடுதியில் சேர்த்துவிட்டால் தவறுகள் நடக்கத்தான் செய்யும்.”

“அவரவர் செல்ஃப் கண்ட்ரோலா இருந்தால் பிரச்சனையில்லை” என்று சிறியவர்களும் பெற்றோர்களும் சொல்கிறார்கள்.

சில கல்லூரி மாணவிகள் “அய் ஜாலி” என்று மகிழ்ச்சியாக கூறகிறார்கள்.




பெரும்பாலும் “பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்வதாலும், அறுவைச் சிகிச்சைசெய்து கொள்வதாலும், பெண்களுக்குக் குறுக்கு எலும்பு சிறுத்துயிருப்பதாலும், பலம் குறைந்த பெண்கள் பெரியவண்டி ஓட்டுவது கஷ்டம். புடவை கட்டும் பெண்கள் எப்படி பெரிய வண்டி ஓட்டுவார்கள்? சின்ன வண்டிதான் பேலன்ஷ் பண்ண வசதியாக இருக்கும். இல்லையென்றால் ஆண்களையே எதிர்பார்க்குபடி ஆகிவிடும்.”

சிலர் “அவரவர் பலத்தையும், விருப்பத்தையும் பொருத்தது. தடைசெய் என்று சொல்லக்கூடாது. பெண்கள் அழகை விரும்புபவர்கள் என்பதால்தான் அவர்களுக்கென வடிவமைத்து விற்பனையைப் பெருக்கிக்கொள்கிறார்கள்.”

சிலர், “அப்படிப் பெண்களுக்கான வண்டியே நிறுத்தியாச்சுனா, வேற வழியில்லாமல் பெண்கள் பெரிய வண்டி ஓட்டக் கத்துக்குவாங்க, ஆடைகளையும் மாத்திப்பாங்க. வருங்காலங்களில் சாத்தியமாகலாம்” என்றனர்.




பெரும்பாலனோர், “திருமணத்திற்குப் பெண்ணின் சம்மதம், சுயவருமானம் அவசியம் தேவை. இன்றைய காலத்தில், கணவன் - மனைவி இருவரும் சம்பாதித்தால்தான் சிரமம் இல்லாமல் காலம் தள்ள முடியும். ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்புக்கு விடுதி கொடுத்தால், நிறையப் பெண்கள் விடுதிக்கு வந்து விடுவார்கள். குடும்பங்கற செட் அப்பே சீரழிந்து போகும். அவங்களே தனியாப் போகணு முனு முடிவெடுத்த பிறகு அவங்க எக்கேடு கெட்டா நமக்கென்ன? அரசாங்கம் எதுக்குத் தனியா விடுதி எல்லாம் நடத்தனும்?” என்று ஆதங்கப்படுகிறார்கள்.

“அது தனிநபர் விருப்பம். ஒவ்வொருத்தருக்கும் தனி மனித ஒழுக்கம் இருந்தால்தான் இந்த மாதிரி பெண்களுக்குப் பாதுகாப்பு” என்கின்றனர் சிலர்.

பலர், “வரவேற்கக் கூடியவை. விடுதி அமைத்துக் கொடுக்க வேண்டும்” என்று மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.







பெரும்பாலானோர், கோபத்துடன் “திருமணத்திற்கு முன்பே கருத்தடைசெய்யறது தப்பு. ஒன்னு ரெண்டு குழந்தையோடு நிறுத்துங்கள் என்று கூறலாமே தவிர, முன்பே கருத்தடை செய்யக் கூடாது. குழந்தை வேணாம்ன்னா எதுக்கு கல்யாணம்? யாருக்காக வேலைக்குப் போகணும், சம்பாதிக்கணும்? இது இல்லாம வாழ்க்கை எதுக்கு? தேவையில்லையே... வாழ்வதற்குத் தனக்கு ஒரு பிடிமானம் வேணும். இல்லையென்றால், தன் தலைமுறையோடு முடிந்துவிடும். அடுத்த சந்ததியிருக்காது. பின் மக்களே இருக்க மாட்டார்கள். குறிக்கோல் இல்லாத பயணம் எதற்கு?” என்கின்றனர்.

**இளைஞர்கள்:** “தன் ஜீனில் குழந்தை வேண்டும். அடுத்த குழந்தை தன் குழந்தை ஆகாது, இரண்டு குழந்தை யாவது அவசியம் வேணும், அப்பொழுதுதான் ஒன்றுக்கொன்று துணையாகயிருக்கும்.” என்று ஆண்களை விட பெண்களே அதிகம் விரும்புகின்றனர்.

சிலர், “ஒன்று, இரண்டுக்கு மேல் குழந்தை பெறுபவர்களையும், ஆண் வாரிசு வேண்டும் என்று குழந்தைகளை அடுக்கிக்கொண்டே போகிறவர்களையும், அதற்காகத் துன்புறுத்துபவர்களையும் கண்டிப்பாகக் கடுமையாகத் தண்டிக்கச் சட்டம் வரவேண்டும்” என கூறகின்றனர்.



திருமணங்கள் உறுதி செய்யப்படும் போதே, அந்த மணமக்களுக்குத் **'தனிக்குடித்தனம்'** என்பதைக் கட்டாயமாக்கு!

காட்டாறு




பலர், படித்த உடனே பெரியவர்களை யார் பார்ப்பது? என்றும் திருமணத்திற்கு முன்பே உறுதி செய்வது தவறு. திருமணத்திற்குப் பின் எண்ணம் மாறலாம். அவரவர் சூழல் பொருத்ததுத்தானே தவிர முன்பே முடிவு செய்ய முடியாது.

**சில மாமியார்கள்:** "கூட்டுக்குடித்தனம் இருந்தால்தான் நல்லது-கெட்டது எடுத்துச்சொல்லி ஆதரவாகப் பார்த்துக் கொள்ள முடியும்.. எப்படிக் குடும்பம் பண்ணனும் என்று கத்துக்கொள்வார்கள், பிள்ளைகளும் தாத்தா பாட்டி அரவணைப்பில் அறிவான பிள்ளையாக வளரும். இவர்களை தனிக்குடித்தனம் வைத்தால் பார்க்க ஆளில்லாமல் தவிப்பார்கள்" என்று கூறுகிறார்கள்.

**இளையவர்களோ:** "பெரியவர்களின் ஆதிக்கத்தின்படி அவர்கள் விரும்பிய படிதான் வாழ்றமாதிரி ஆயிடும். தான் விரும்பிய ஆடை, சாப்பாடுகூடச் சாப்பிட முடியாது. தான் விரும்பிய வெளி இடங்களுக்குப் போகமுடியாது.

இன்று என் அக்காகாக்கள் வாழ்க்கையைப் பார்த்தா கூட்டுக்குடித்தனம் வேண்டாம் என்று தோணுது , தனியாக இருந்தால்தான் சுயமாக சிந்திக்க, தன்னம்பிக்கை வளர பிரச்சனைகளைச் சாமாளிக்க, சிக்கனமாக, சேமிப்புடன் தான் விரும்பியபடியே சுதந்திரமாக, மகிழ்ச்சியாக வாழலாம்.. பிரச்சனை வந்தபின் தனிக்குடித்தனம் செல்வதற்கு பிரச்சனையே வராமல், யாரையும் காயப்படுத்தும் நிலைக்குத் தள்ளாமல் திருமணத்திற்க்கு முன்பே உறுதி செய்வது நல்லதுதான்.இதை நாங்கள் வரவேற்கிறோம்" என்கின்றனர்.

**...எது எப்படியிருந்தாலும் நமது பாரம்பரியம், கலாச்சாரம் இது தான். இது எப்படிப் பெண்ணை இழிவு படுத்தும்?... என்கின்றனர் பலர்**

அனைவருமே சிரித்துக் கொண்டே சூப்பர் என்று வரவேற்றனர்.

**மருமகள்கள்:** "கண்டிப்பாகச் சரிபங்கு எடுத்துக்கணும், இல்லை யென்றால் கண்டிப்பாகக் கடும் தண்டனை வழங்க வேண்டும். உடல் சரியில்லாத நிலையில் கூட, தானே தவழ்ந்து வந்து வேலை செய்ய வேண்டியிருக்கு. பிள்ளைகளையும் நானேதான் பார்க்கணும் . உதவி செஞ்சாதான் என்ன; என்று கேட்டால், நீ மட்டும் தான் அதிசயமா வேலை செய்ரியா எல்லாப் பொம்பளைங்களும்தான் வேலை பார்க்கிறாங்க"... என்று என் கணவனும், "அந்த காலத்தில நானெல்லாம் அம்மியில் அரைச்சு ஆட்டுக்கல்லுல மாவாட்டி, 10 மாட்டுக்கு சானியள்ளி, நெல்லுகுத்தி, வெறகு அடுப்புல சமைச்சு, காட்டுவேலையும் பாத்து என் பிள்ளைகளை வளர்த்தேன். இன்னைக்கு அப்படியா வீட்டில் அத்தனைக்கும் மிசின் வாங்கி போட்டாச்சு. ஆம்பள சம்பாதிச்சுக்கொடுக்குறான், வீட்டில் சும்மாயிருக்கிற உனக்கு வலிக்குதா? என்று என் மாமியாரும் சொல்லிகிட்டு இருக்கிறப்ப, ஹவுஸ் ஒய்ஃப் ஆக இருந்துட்டு சரிபங்கு எடுத்துக்கச் சொன்னால், கணவனும் மாமியாரும் வெளக்க மாத்தைத்தான் கையில் எடுப்பார்கள். என்ன பண்றது? விதி." முதல்ல இவங்கள புடுச்சு ஜெயிலில் போடணும்." என்று குமுருகிறார்கள்.

சிலர், "சரி பங்கு கூட எடுக்கவேண்டாம், சின்ன சின்ன உதவியாக இருந்தால் கூடப் போதும். உடல்நிலை சரியில்லாத பொழுது மட்டும் பார்த்தால்கூடப் போதும். மறுப்பது வருத்தம் அளிக்கிறது.".

சிலர் "தண்டனையெல்லாம் தேவையில்லை. சில வீடுகளில் இருவரும் வேலைக்குப் போகிறார்கள் வேலையையும் பகிர்ந்துக்கொள்கிறார்கள்." என்று கூறுகிறார்கள்.

மக்களின் கருத்துக்களுக்கு நமது விளக்கங் களை அடுத்த இதழில் பார்ப்போம்.

மௌ.அர.ஜவஹர், பழனி

# பார்ப்பன - இந்திய தேசியக் கட்சிகளின் மெகா ஊழல்கள்



முற்போக்கு பேசிவந்த கமல்ஹாசன் தற்போது ஊழலுக்கு எதிரான அவதாரம் எடுக்கப் போவதாகவும் அதுவும் அரசியல் அவதாரமாக இருக்கும் என ஊடகங்களில் முழங்கி வருகிறார். அவரது ஊழல் ஒழிப்பு என்பது மாநில அளவில் மட்டுமே இருக்குமாம். அதுவும் இந்த ஊழலை ஒழிப்பதற்காக பி.ஜே.பி, காங்கிரஸ்ஸுடன் தேவைப்பட்டால் கைகோர்ப் பாராம்!

நல்லது, ஊழல் ஒழிவதில் யாருக்கும் வருத்தமோ கவலையோ இருக்கவே இருக்காது. மாறாக மகிழ்ச்சியே. அதேசமயம் அவரது கூற்று ஊழலை எதிர்க்கிறதா? அல்லது ஊழல் என்ற சாக்கில் பார்ப்பன எதிர்ப்பை முனை மழுங்க வைக்கும் யுக்தியா? (குயிக்தியா?) என்பதைச் சமூகக் கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும்.

> “தேசியம் என்பதற்கு அரசியலைச் சம்பந்தப்படுத்திய கருத்தும் இந்தியாவின் பழைய நாகரீகத்திற்கும், பழக்கவழக்கத்திற்கும் ஏற்ற அரசியலை ஸ்தாபிக்கச் செய்த சூழ்ச்சியே தவிர வேறு இல்லை.”
>
> - தோழர் பெரியார், குடி அரசு 19.03.1933

> “இன்று இந்திய யூனியனின் முக்கியக் கொள்கைகள் என்னவென்றால், சாதி காப்பாற்றப்பட வேண்டும்;மேல் சாதியான் மேல் பதவியில் இருக்கும்படியான தன்மைகள், முறைகள், பரம்பரை பழக்கவழக்கங்கள் இவை தவிர, யூனியனில் வேறு எந்த, மற்ற நாடுகளில் இல்லாத சிறப்பான, குறிப்பான ‘நன்மைகள்’ இருக்கின்றன?”
>
> - தோழர் பெரியார், விடுதலை 09.06.1972

மாநில உணர்வு என்பது அடிப்படையில் மனித உரிமை சார்ந்தது. நதி நீர்ச் சிக்கல்கள், மொழி, கனிமவள உரிமை, கல்வி உரிமை, மருத்துவ உரிமை, ..போன்ற அடிப்படை உரிமைகள் சார்ந்தது. எத்தனை பித்தலாட்டங்கள் செய்தாலும் மாநிலக் கட்சிகளின் குரல்கள் இதனடிப்படையிலேயே இருக்கும்.

**“தேசியம் என்பதற்கு அரசியலைச் சம்பந்தப்படுத்திய கருத்தும் இந்தியாவின் பழைய நாகரீகத்திற்கும், பழக்கவழக்கத்திற்கும் ஏற்ற அரசியலை ஸ்தாபிக்கச் செய்த சூழ்ச்சியே தவிர வேறு இல்லை.”**

மாறாக தேசியக் கட்சிகளின் குரல்கள் மாநில உரிமைக்குரலை நசுக்குவதாகவே இருக்கும். நுழைவுத் தேர்வு, நீட் போன்ற தகுதித் தேர்வு, சமஸ்கிருதம் கலந்த இந்தித் திணிப்பு, தேசிய நதி நீர் ஆணையம் என்கிற பேரால் இரு தேசிய இனத்துக்குள் இருக்கும் சிக்கலை மேலும் குழப்புவது, ஒரே கல்வி என்கிற பெயரில் கல்வி உரிமையில் ஆதிக்கம் செய்ய முனைவது, போன்ற அடிப்படையிலேயே இருக்கும்.

அதாவது தேசியக் கட்சிகள் பார்ப்பன நிலையிலும், மாநிலக் கட்சிகள் சூத்திர நிலையிலும் இருக்கும். சூத்திரனின் குற்றேவலில் குறை கண்டுபிடித்து மாநில உரிமைகளைப் புறந்தள்ளி சூத்திர ஊழலை முன்னிறுத்தி மேலும் பார்ப்பன அடிமையாக்கும் முழக்கமே பார்ப்பனக் கமல் ஹாசனின் ஊழல் ஒழிப்பு முாக்கம்!

என்னவோ! தேசியக் கட்சிகள் யோக்கியம் போலவும் இந்த சூத்திர ஊழலை ஒழிக்க அந்த பா.ஜ.க.,காங்கிரஸ் யோக்கியர்களுடன் கை கோர்ப்பேன் எனக்கூறி பெரியாரிய மண்ணிலேயே 'பெரியவா' போலப் பேசுகிறார். ஹலோ! கமல், நீங்கள் மறைக்க விரும்பும் விசயம் ஊழலின் ஊற்றுக் கண்ணே; தேசியக் கட்சிகள்தான் என்பது!

அப்படியே மெதுவாக தேசியக் கட்சிகளின் ஊழல் பட்டியலைக் கிடைத்தவரைப் பார்ப்போமா? அதுவும் அவர்கள் செய்த ஊழலின் தற்போதைய மதிப்புடன்?

1. **1948 ஜீப் ஊழல்** V.K.கிருஷ்ணமேனன். ஊழல் பண மதிப்பு ரூ- 80 லட்சம். தற்போதைய மதிப்பு ரூ- 213 கோடி,
2. **1949 ராவ் சிவ் பகத்சிங்** அர்ஜுன் சிங்கின் அப்பா. பண மதிப்பு ரூ- 25,000. தற்போதைய மதிப்பு ரூ- 67,64,646,
3. **1951 சைக்கிள் இறக்குமதி ஊழல்** S.A.வெங்கட்ராமன் Secretaray,Ministry of Commerce and Industry,
4. **1956 BHU பண மோசடி வழக்கு.** பணமதிப்பு ரூ-50 லட்சம். தற்போதைய மதிப்பு ரூ-133,31,41,120
5. **1958 முந்திரா ஊழல்.** இந்திரா காந்தி. பண மதிப்பு ரூ- 1.2 கோடி.தற்போதைய மதிப்பு ரூ-319,95,38,687,
6. **1960 தேஜா லோன் ஊழல்.** ஜெயந் சர்மா தேஜா.பண மதிப்பு ரூ-22 கோடி. தற்போதைய மதிப்பு ரூ- 5001,17,90,808,
7. **1964 கைரான் வழக்கு** பிரதாப் சிங்,
8. **1971 நாகர்வாலா ஊழல்.** இந்திரா காந்தி,வெங்கட் பிரகாஷ் மல்கோத்ரா.பண மதிப்பு ரூ- 60 லட்சம். தற்போதைய மதிப்பு ரூ-77,06,36,356,
9. **1974 மாருதி ஊழல்.** இந்திராகாந்தி, சஞ்சய்காந்தி,
10. **1976 KUO எண்ணை ஊழல்.**இந்திரா காந்தி.பண மதிப்பு ரூ- 2.2 கோடி. தற்போதைய மதிப்பு ரூ-129,50,99,106,
11. **1980 THAL Vasit Project.** பெட்ரோலிய செக்ரெட்டரி, எச்.என்.பகுகுணா, என்.என்.கபாடியா பெட்ரோலியத் துறை அமைச்சர், பி.சி.சேத்தி, கே..உண்ணிக்கிருஷ்ணன்,
12. **1986 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் ஊழல்**
13. **1990 ஏர்பஸ் ஊழல்** பண மதிப்பு ரூ-2.5 கோடி. தற்போதைய மதிப்பு ரூ-19,86,92,403,
14. **1992 ஹர்சத் மேத்தா ஊழல்.** ஹர்சத் மேத்தா.பண மதிப்பு ரூ- 5,000 கோடி. தற்போதைய மதிப்பு ரூ- 29338,94,87,097,
15. **1994 சர்க்கரை இறக்குமதி ஊழல்.** பண மதிப்பு ரூ- 4,200 கோடி. தற்போதைய மதிப்பு ரூ-23229,70,86,615,
16. **1995 பிரபரன்சியல் அபார்ட்மென்ட் ஊழல்** ரூ- 5000 கோடி தற்போதைய மதிப்பு ரூ.27169,87,25,991,
17. **1995 யூகோய்லேவ் டைனர் ஊழல்** - ரூ. 400 கோடி தற்போதைய மதிப்பு ரூ.2173,59,01,131,
18. **1995 - காஸ்லாவ் விருந்து ஊழல்** - ரூ. 400 கோடி தற்போதைய மதிப்பு ரூ. 2173,59,01,131,
19. **1995 மேகாலயா காடு பாதுகாப்புத் திட்டம்.** பண மதிப்பு ரூ-300 கோடி.தற்போதைய மதிப்பு ரூ-1630,19,32,206,
20. **1995 Preferential allotment திட்டம்.** பண மதிப்பு ரூ-5000 கோடி. தற்போதைய மதிப்பு ரூ-27169,87,25,991,
21. **1995 Yuoslav Dinar திட்டம்.** பண மதிப்பு ரூ-400 கோடி. தற்போதைய மதிப்பு ரூ- 2173,59,01,131,
22. **1995 லக்குபாய் பதக் ஊறுகாய் ஊழல்.** நரசிம்மராவ்,
23. **1996 தொலைத்தொடர்பு ஊழல்.** சுக்காராம்,
24. **1996 யூரியா பேர ஊழல்** சி.எஸ்.ராமகிருஷ்ணன் M.D.,National Fertiliser and group of businessmen, நரசிம்மராவ்.பண மதிப்பு ரூ-133 கோடி. தற்போதைய மதிப்பு ரூ- 655,48,91,112,
25. **1996 ஹவாலா ஊழல்.** எஸ்.கே.ஜெயின், எல்.கே..அத்வானி, வி.சி..சுக்லா, சி.கே..ஜாஃபர் செரிஃப், ஆசிஃப் முகமதுகான், மதன்லால் குரானா, கல்பத் ராய், என்.டி..திவாரி
26. **1997 - எஸ்.என்.சி. லாவலைன் மின்சாரத் திட்ட ஊழல்** - ரூ. 374 கோடி தற்போதைய மதிப்பு ரூ.2012,95,11,326,
27. **1997 சி.ஆர். பான்சால் பங்கு மார்க்கெட் ஊழல்** - ரூ. 1200 கோடி தற்போதைய மதிப்பு ரூ.6458,66,78,373,
28. **1998 தேக்கு மர வளர்ப்பு ஊழல்** - ரூ. 8000 கோடி தற்போதைய மதிப்பு ரூ.50296,16,78,793,
29. **2001 யு.டி.ஐ. ஊழல்** - ரூ. 4800 கோடி தற்போதைய மதிப்பு ரூ.28388,09,37,921,
30. **2001 பங்குச்சந்தை ஊழல்கள்.** கேதன் பராக். பண மதிப்பு ரூ-1,15,000 கோடி.தற்போதைய மதிப்பு ரூ- 680131,39,67,091,
31. **2001 கேதான் பரேக் செக்யூரிட்டி ஊழல்** - ரூ. 1250 கோடி தற்போதைய மதிப்பு ரூ.7392,73,32,087,
32. **2001 வீரேத்திர ரஸ்ட்டதி உலக அளவில் ஊழல்** - ரூ.1 பில்லியன் வரை தற்போதைய மதிப்பு ரூ.591,41,82,498,
33. **2002 கார்கில் யுத்த ஊழல்.** சவப்பெட்டி ஊால்,
34. **2002 சஞ்சய் அகர்வால் ஹோமிராடு ஊழல்** - ரூ. 600 கோடி தற்போதைய மதிப்பு ரூ.3548,51,20,419,

35. **2003 பிரமோத் மகாஜன் - டாடா விஎஸ்என்எல் ஊழல்** - ரூ. 1200 கோடி தற்போதைய மதிப்பு ரூ.5449,49,96,367,

36. **2003 பத்திர ஊழல்** (Stamp Paper) அப்துல் கரீம் தெல்கி.பண மதிப்பு ரூ-30,000 கோடி. தற்போதைய மதிப்பு ரூ-136237,50,10,899,

37. **2005 ஐ.பி.ஓ.டி. மாட் ஊழல்** - ரூ. 146 கோடி தற்போதைய மதிப்பு ரூ.530,41,69,101,

38. **2005 - ஸ்கார்பென் சப்மைரின் ஊழல்** - ரூ.18, 979 கோடி தற்போதைய மதிப்பு ரூ.68950,70,66,367,

39. **2005 நட்வர் சிங்கின் Oil for Food,**

40. **2006 பஞ்சாப் சிட்டி சென்ட்டர் ஊழல்** - ரூ. 1500 கோடி தற்போதைய மதிப்பு 4541,24,92,734,

41. **2006 தாஸ்காரிடார் ஊழல்** ரூ. 175 கோடி தற்போதைய மதிப்பு ரூ.529,81,16,523,

42. **2008 பூனே பில்லியனர் ஜெகன் அலிகான் வரி ஏய்ப்பு ஊழல்** - ரூ. 50,000 கோடி தற்போதைய மதிப்பு ரூ.101724,00,00,000,

43. **2008 சத்யம் ஊழல்** - ரூ. 10, 000 கோடி தற்போதைய மதிப்பு ரூ.20344,80,00,000,

44. **2008 ரிலையன்ஸ் பங்கு விற்பனை ஊழல்** தற்போதைய மதிப்பு ரூ. 513 கோடி.1043,68,82,400,

45. **2008 ராணுவ ரேசன் ஊழல்** - ரூ. 5000 கோடி தற்போதைய மதிப்பு ரூ.10172,40,00,000,

46. **2008 - ஸ்டேட் பாங்க் ஆப் சௌராஸ்ட்ரா ஊழல்** - ரூ. 95 கோடி தற்போதைய மதிப்பு ரூ.193,27,56,000,

47. **2009 அரிசி ஏற்றுமதி ஊழல்** - ரூ. 2500 கோடி தற்போதைய மதிப்பு ரூ.4884,65,53,478,

48. **2009 ஒரிசா சுரங்க ஊழல்** - ரூ. 7000 கோடி தற்போதைய மதிப்பு ரூ.12277,03,39,566,

49. **2009 மதுகோடா சுரங்க ஊழல்** - ரூ. 37000 கோடி தற்போதைய மதிப்பு ரூ.64892,89,55,871,

50. **2010 எல்.ஐ.சி. வீட்டுக் கடன் வழங்குவதில் ஊழல்**

51. **2010 மும்பையில் ராணுவ வீரர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு ஆதர்ஷ் ஊழல்**

52. **2010 புதுடெல்லியில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் நடைபெற்ற ஊழல்.**

53. **2010 ஐ.பி.எல் கிரிக்கெட் ஊழல்**

54. **2012- வக்பு வாரிய நிலமோசடி ஊழல்** - ரூ. 200000 கோடி

55. **2012 இந்திய நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு முறைகேடு ஊழல்** - ரூ.185591 கோடி

56. **2012 உத்தரப்பிரதேசம் தேசிய ஊரக சுகாதாரத் திட்ட ஊழல்**- ரூ.10000 கோடி

57. **ஹவாலா நிதி முறைகேட்டில் 18 மில்லியன் டாலர் ஊழல்.**

58. **தங்க நாற்கரச் சாலை அமைக்கும் திட்டத்தில் நில மோசடியில் 100 மில்லியன் டாலர் ஊழல்.**

59. மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சியின் முன்னாள் தேசியத் தலைவர் நிதின் கட்காரியும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மத்திய வேளாண் அமைச்சருமான சரத்பவாரும் சம்பந்தப்பட்ட பாசனக் கால்வாய் திட்ட மோசடியில் ரூ 75,000/- கோடி ஊழல்.

60. கர்நாடகத்தில் ரெட்டி சகோதரர்கள் கனிம வளங்கள் வெட்டி எடுப்பதற்கு ஆதரவாகச் செயல்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் சுஸ்மாசுவராஜ் பெற்றது ரூ 1500 கோடி ஊழல்.

61. அனைத்திற்கும் மேலாக நரேந்திர மோடி முதல்வராக இருந்த குஜராத் மாநிலத்தில் கட்ச் மாவட்டத்தில் அலுமினா சுத்திகரிப்பு ஆலைக்கு நிலம் குத்தகைக்கு வழங்குவதில் செய்த நிதி மோசடி ஊழல்.

கொள்முதல் முதற்கொண்டு,சாதனங்கள் உற்பத்தி வரையிலான எந்த விசயமும் கேள்விக்கு உள்ளாக்கப்படக் கூடாது என்ற சூழ்நிலையை அதாவது தேச பக்தி,தேசப் பாதுகாப்பு என்ற போர்வையில் அடிக்கும் கொள்ளைக்கு அளவே இல்லை. ஆம் அதுதான் பாதுகாப்புத் துறை!

1. ரூ.3,600 கோடிகள் மதிப்புக் கொண்ட இத்தாலி நாட்டின் அகஸ்டா வெஸ்ட்லேண்ட் உலங்கு ஊர்தி (ஹெலிகாப்ட்டர்) உடன் படிக்கையில் ரூ.300 கோடி லஞ்சம் பெற்றதாக எழுந்த அய்யத்தை அடுத்து அந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டது,

2. BEML என்ற பொதுத் துறை நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் டாட்ரா டிரக் எனும் அனைத்து தரைப்பகுதிக்களுக்குமான தரைப்படை போக்கு வரத்து வாகனம் வாங்குவதில் கடந்த 14 ஆண்டு களாக குறைந்தது ரூ.750 கோடிகள் லஞ்சமாகவும், முறைகேடான தரகுத் தொகையாகவும் விழுங்கி விட்டனர் என்பதால் அந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டது.

3. HDW நீர்மூழ்கிக் கப்பல் ஊழல் நடை பெற்ற போது கடற்படையின் அட்மிரலாக இருந்தது எஸ்.எம்.நந்தா.அவர் பதவி ஓய்வுக்குப் பின் க்ரௌன் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தின் அதிகாரியானார். அந்தக் க்ரௌன் என்பது ஒரு கேடு கெட்ட ஆயுத நிறுவனம்.அது நந்தாவின் மகனான சுரேசு நந்தாவின் ஆயுத வணிக நிறுவனம். அவர் பாராக் ஏவுகணை ஊழல் தொடர்பாகச் சோதனைக்கு ஆளானவர்.

4. ஊழலுக்குப் பின் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த டாட்ரா வாகனத்துக்கான தடையை அப்போதையப் பாதுகாப்புத் துறையின் அமைச்சர் மனோகர் பாரிக்கர் இரத்து செய்கிறார். ஊழலுக்கு சில சில்லறை அதிகாரிகள்தான் காரணம் எனக் கூறி அனுமதிக்கிறார். இந்திய இராணுவத்துக்கு இந்நிறுவனம் வழங்கும் சரக்குந்துகள் ‘தரங் குறைந்தவையாக’ இருந்ததாகவும், அவற்றுக்கு ஒப்புதல் அளிக்க தனக்கு கையூட்டு அளிக்க அந்நிறுவனம் முன்வந்ததாகவும் ஓய்வு பெற்ற தரைப்படைத் தளபதியான வி.கே.சிங் 2012 ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டிய பின்புதான் இந்தத் தடை விதிக்கப்பட்டது. அந்த வி.கே.சிங் தற்போதைய அமைச்சரவையில் உள்ளார்,

5. பிரஞ்சு நிறுவனமான டசால்ட் ஏவியன்ஸ், 1000 கோடி டாலர்களுக்கு(நம் பண மதிப்பில் ரூ.50,000 கோடி)புரிந்துகொள்ளும் திறனுள்ள தொழில் நுட்பப் பரிமாற்றத்துடன் (TOT) ரஃபேல் போர் விமானங்களை (126 விமானங்கள் 18 விமானங்கள் பறக்கும் நிலையிலும் மீதம் 108ம் ஹிந்துஸ்தான் ஏரோநேட்டிக்கல் நிறுவனத்தில் வைத்து தயாரிப்பதற்குத் தொழில் நுட்பம் மற்றுமாலோசனை வழங்க வேண்டும்) வழங்க முன்வந்தது.

ஆனால் ஒப்பந்தப் புள்ளியைப் பெற்ற பின்,அந்நிறுவனம் விலையை 3000 கோடி டாலருக்கு (நம் பணமதிப்பில் ரூ.1,50,000 கோடி) உயர்த்தியது. அப்போதைய பாதுகாப்பு அமைச்சகம் அதைப் புறக் கணிக்கக் கூட நடவடிக்கை எடுக்கவில்லை.அதை விடக் கொடுமை இந்த ஒப்பந்தத்தை ஃபிரான்ஸ் சென்ற பாரதப் பிரதமர் மோடி இரத்து செய்து விட்டு தற்போது 36 ஜெட் போர் விமானங்களை 7.8 பில்லியன் டாலர் மதிப்புக்கு புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

6. இப்புதிய ஒப்பந்ததில் ஹிந்துஸ்தான் ஏரோநேட்டிக்கல் கழற்றிவிடப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக அனில் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தை டசால்ட் ஏவியன் நிறுவனத்துடன் கூட்டாளி ஆக்கியுள்ளது,

7. 2012ல் ஒரு ஜெட் 526.10 கோடி.மோடியின் ஒப்பந்தத்தில் ஒரு ஜெட்டின் விலை 1570.80 கோடி,

8. விமானந்தாங்கி போர்க் கப்பல்களான ப்ராஜக்ட்15 (டிஸ்ராய் ரக போர்க் கப்பல்கள்), ப்ராஜக்ட் பி-115(போர்க் கப்பல்) மற்றும் ப்ராஜக்ட் பி-17(போர்க் கப்பல்கள்) இவற்றை ஒரு கப்பலுக்கு ரூ.93 கோடி தொடக்கத்தில் உத்தேசிக்கப்பட்ட இரகசிய சாதனத்தின் விலையானது இறுதியாக ஒரு கப்பலுக்கு ரூ.707 கோடி என உயர்ந்தது,

9. டையோ கிரிஸ்டல் எனும் கடற்படை சாதனம் ரூ.35 லிருந்து ஒரு வாரத்திலேயே ரூ.17,305 க்கு விலை கொடுத்து வாங்கியது,

10. எலக்ட்ரிக் ரிலே என்ற ரூ.95 மதிப்புள்ள சாதனத்துக்கு ரூ. 11,192 விலையாகக் கொடுக்கப் பட்டது,

11. பேலன்சிங் பிஸ்ட்டல் என்ற கருவி ரூ.1,475 க்கு வாங்கப்பட்டு பின் அதே கருவியின் மற்றொரு வகை ரூ.46,750 க்கு வாங்கப்பட்டது.

இதில் என்ன கொடுமையான உண்மை என்றால் மத்திய அரசில் உள்ள 55 துறைகளில் அமைச்சரகங்களில் நாட்டின் போக்கை திட்டமிடும் அதிகாரம் மிக்க 74,866 பதவிகளில் 51,762 பதவிகளில் பார்ப்பனரே! அதாவது 70 சதம் பார்ப்பனரே! இத்தனைக்கும் இடஒதுக்கீடு 50 சதம் இருந்தும் அதைப் புறக்கணித்து அதிகாரம் செய்கிறது அக்கிரகாரம்!

நமது உளவுத்துறையில் பெரும்பாலும் பார்ப்பனர்களே! இந்த உளவுத்துறைக்கு ஏராளமான பணம் அமெரிக்காவிலிருந்து வருகிறது. இதனைத் தமிழகக் காவல் துறையில் பணியாற்றிய திரு.மோகன் தாஸ் கூறியுள்ளார். இந்தத் துறையில் பணியாற்றும் அதிகாரிகளின் பிள்ளைகள் அமெரிக்காவில் வாழ்கின்றனர். சிலரின் குடும்பம் அமெரிக்காவில் உள்ளது. சிலருடைய பிள்ளைகள் அமெரிக்காவில் குடியுரிமைக்கானப் பச்சை அட்டை பெற்றுள்ளனர்.

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஊழல்கள் நடைபெற்றால் ஒப்பந்தங்கள்தான் இரத்து செய்யப்படுகிறதே ஒழிய அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் காணோம்ம்ம்ம்ம்ம்!!!

**ஊழல் செய்வதில் மட்டுமல்ல; ஊழல் சேற்றை வாரி இறைப்பதிலும் தேசியக் கட்சிகளே முதலிடம்.**

1. முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் வளர்ச்சி பிடிக்காமல் அவர் மீதும் அவர் மகன் மீதும் போலியான ஊழல் குற்றச்சாட்டைக் கூறி அவருக்குக் களங்கம் ஏற்படுத்த ஒரு பெரும் பார்ப்பனக் கூட்டமே மோசடி செய்து அம்பலப் பட்டுப் போனது!!

2. அதுதான் செயிண்ட் கிட்ஸ் மோசடி வழக்கு!

3. பி.வி..நரசிம்மராவ் பார்ப்பனர், கே.கே..திவாரி பார்ப்பனர், சந்திராசாமி தரகுப் பார்ப்பனர் (ராஜீவ் கொலையில் பலத்த சந்தேகத்துக்கு உள்ளானவர் ), சந்திராசாமியின் கையாள் மாமாஜி பார்ப்பனர், கல்பனாத்ராய் பார்ப்பனர் ( நாடாளு மனற உறுப்பினராக இருந்து பிறகு அமைச்சராகிச் சர்க்கரை ஊழலில் மாட்டி சிறைப்பட்ட வர்ணாஸ்ரம வெறியர்,இதில் இன்னொரு உண்மை இவர் தாவூத் இப்ராகிம் என்ற இன்னும் இந்திய அரசால் தேடப்படும் குண்டு வெடிப்புக் குற்றவாளியின் நண்பர் ), ரத்தினாகர் பாண்டே பார்ப்பனர், வர்மா பார்ப்பனர் ( செயலாக்கப் பிரிவு அதிகாரி )!!

4. இந்தப் பழி போடும் பொய் வழக்குக்காகப் பார்ப்பன சுப்பிரமணி ஸ்வாமியும் உடந்தை (இவருக்கும் ராஜீவ் கொலைக்கும் மிகுந்த நெருக்கம் இருப்பதாக இவரோடு இருந்த திருச்சி வேலுச்சாமி அவர்கள் புத்தகமே வெளியிட்டுள்ளார்)!!

5. இம் மோசடி மீது வழக்குப் பதிந்து நேர்மையாக செயல்பட்ட என்.கே..சிங் எனும் சி.பி.அய். அதிகாரியை பணி செய்யவிடாமல் தடுத்து வழக்கின் முக்கிய காலகட்டத்தில் பணிமாற்றம் செய்து இடைஞ்சல் கொடுத்தனர்!

**தேசியக் கட்சிகளென்றாலே ஊழல் பித்தலாட்டம் இவற்றின் மொத்தக் குத்தகைதாரர்களாவர்**

மேற்கண்ட ஊழல்கள் தவிர மத்திய அரசு, பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய பெரு நிறுவனங்கள் முதலியவற்றுடன் தொழில் ணபுரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடும்போது இந்தியாவின் பிரதமர், மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் உயர்அதிகாரிகள் ஆகியோர் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மதிப்பீட்டுத் தொகையில்

குறிப்பிட்ட விழுக்காடு (ஏறக்குறைய 25 சதம்) லஞ்சமாக பெறுகின்றனர். பிரதம மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம், நபார்டு சாலை மேம்பாட்டுத் திட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மாநில நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் முதலியவைகளிலும் மேற்கண்ட நபர்கள் லஞ்சம் பெறுகின்றனர்.

இந்தியாவில் லஞ்சத்திலும், ஊழலிலும் புரளும் பணத்தைக் கொண்டு இந்திய மக்கள் அனைவருக்கும் இலவசமாக தரமான மருத்துவ மனைகள் அமைக்க முடியும். சுத்திகரிப்பு செய்து நீர்ப்பாசனத்தை பெருக்கி விவசாயத்தை மேம்படுத்த முடியும். விவசாயிகளின் விவசாயக் கடன்களையும், மாணவர்களின் கல்வி கடன்களையும் தள்ளுபடி செய்ய முடியும். இந்தியாவில் உள்ள குழந்தைகளுக்குக் இலவசக் கல்வி அளிக்க முடியும்.இந்தியாவில் உள்ள வீடற்ற ஏழை மக்களுக்குத் தரமான பாதுகாப்பான வீடு கட்டி வழங்கு முடியும். இந்தியாவில் உள்ள அனைத்த கிராம, நகர மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க முடியும். அண்மையில் பி.பி.சி தொலைக்காட்சி நடத்திய ஆய்வில், ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என அறிக்கை வெளியிட்டுள்ளது

ஊால்களை மாநிலங்களில் முதலில் தொடங்கியதே தேசியக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தான்.பின்னர் படிப்படியாக மற்ற மாநிலக் கட்சிகள் தேசியக் கட்சியைப் பார்த்து ஊழலைத் தொடங்கின.அதுவும் 1970 களில்!. வாய்ப்பாகக் தேசியக் கட்சிகளும் இதனை ஆரம்பத்தில் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டுப் பார்ப்பன மற்றும் பார்ப்பன அடிவருடி ஊடகங்களில் மெதுவாக ஊழல் என்பதே மாநிலக் கட்சிகளால்தான் என்ற கருத்துருவாக்கத்தை உண்டாக்கினர்.பார்ப்பன மயமான வருமான வரித்துறையால் மிரட்டப்பட்டுப் பார்ப்பன மயமான ஆடிட்டர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்கும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இப்படிப் பச்சையாக தேசியக் கட்சிகளின் ஊழல்மயத்தை மறைத்துவிட்டு அவர்களோடு கூட்டுச் சேர்ந்து ஊழலை ஒழிப்பேன் என்று சொல்லும் கமல் அவர்களே! பார்ப்பனர் பூணூல் அணிந்தாலும் அணியாவிட்டாலும் பார்ப்பனர் பார்ப்பனரே! பார்ப்பனரே!! பார்ப்பனரே!!!!

டிசம்பர்-24

# வீரவணக்கம்

ஆண்டாண்டு காலமாய் அடுப்படியில்
அடிமைப்பட்டிருந்த பெண்களை
ஆணுக்கு நிகராய் வாழ அறிவுறுத்தினாய்.

சுயசிந்தனைக்கு முட்டுக்கட்டையாய்
ஜாதிப்பற்று, மதப்பற்று, தேசப்பற்று,
மொழிப்பற்று இருக்கும் என்றாய்,
சுயமரியாதை சமத்துவ சமுதாயம் மலர
பற்றனைத்தையும் அடியோடு
ஒழிக்கச் சொன்னாய்.

ஓயாத பயணத்தினூடே ஒரு சமயம்
மிதிவண்டியில் கல்வி கற்கச்
சென்ற சிறு பெண்ணைக்
கண்கொட்டாமல் கண்டுகளித்தாயாம்.

பெண்களெல்லாம் படிக்கத்
தொடங்கி விட்டார்கள்,
மிதிவண்டி ஓட்டுகிறார்கள்,
முன்னேறி விடுவார்கள் என
சிறுபிள்ளையாய் குதூகலித்தாயாம்.

அரிதினும் அரிது அகவை
அதிகரித்த பின் தாய்மைப் பேறு
அகவையில் மூத்த நீ மட்டும் எப்படி
இத்தனை பெண்களின் தாயானாய்?

தனக்கென வாழாமல் பிறர்க்கென
வாழந்த தகைமையாளன் நீ,
ஆரிய சூழ்ச்சியால் அறியாமை இருட்டில்
மூர்ச்சையற்றுக்கிடந்த பெண்ணிணத்தை
உன் கைத்தடி ஓசையால் தட்டியெழுப்பினாய்.

மூத்திரப்பையோடு 94 அகவையிலும்
முதுமையைத் தாண்டி தளராது,
வீதி,வீதியாய்த் தமிழினத்தின்
மீட்சிக்காய் நடை பயின்றாய்.

அறிவை விரிவு செய்து
அவனியை ஆளச்சொன்னாய்,
ஆகாய விமானத்தையும்,
அண்ட சராசரத்தையும் ஆள
தலைப்பட்டோம் இன்று
பெண்கள் நாங்கள்,

விதைத்தவன் நீயோ
உறங்கிக் கொண்டிருக்கிறாய்,
விதைகள் நாங்கள் வீறு கொண்டு
வேர் பிடிக்கிறோம்
சுயமரியாதைப் பகுத்தறிவுப் பாதையில் ...

தாராபுரம் பூங்கொடி

சி.இராவணன்


# நூல் அறிமுகம்

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பல சம்பவங்கள் ஆரிய ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே பயன்பட்டுள்ளது.

**திலகர் தொடங்கி பாரதி வரை அனைவரும் ஆங்கிலேயர் ஏன் இந்தியாவை விட்டுப் போக வேண்டும் என நினைத்தார்கள் என்று வரலாற்றை புரட்டிப் பார்ப்போமானால், அதற்குப் பின்பு ஒரு பார்ப்பன ஆதிக்க அரசியல் ஒழிந்திருக்கும். பொதுவாக பார்ப்பனர்கள் தங்களுக்கு நேர்ந்த பாதிப்பை சமூக பாதிப்பாக மாற்றுவதில் கெட்டிக்காரர்கள்.**

இந்தியாவின் பெரும்கேடானது சாதியச் சமூக அமைப்பாகும். அந்தச் சாதியை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுவதே சுதந்திரப் போராட்டம் என சாயம் பூசப்பட்டது. அப்படிப் பூசப்பட்ட புனைவே வீர? வாஞ்சி நாதனின் ஆஷ் படுகொலை.

ஆஷ் படுகொலைக்குக் பின்னால் உள்ள அரசியலை, புதுக்கோட்டையைச் சார்ந்த தோழர் மருத்துவர் ஜெயராமன் அவர்கள் பல்வேறு ஆதாங்களைத் திரட்டி வாஞ்சிநாதன் மீது கட்டப்பட்டுள்ள பிம்பங்களை உடைக்கிறார். ‘ஆஷ் படுகொலை புனைவும் வரலாறும்’ என்ற நூலின் மூலம் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் இன்னொரு பக்கத்தை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். இந்த நூலை காட்டாறு வாசகர் களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமைப் படுகிறோம்.




### வாஞ்சி அய்யரின் கடிதம்

கலெக்டர் ஆஷ் படுகொலைக்குப் பின்பு ரயில் பெட்டியில் பெண்களின் கழிவறையில் தன்னைத் தானே சுட்டுக்கொண்ட வாஞ்சிநாதனின் சட்டை பையிலிருந்து கைப்பற்றப் பட்ட கடிதத்தில் - தான்

எதற்காக கலெக்டர் ஆஷ் அவர்களைக் கொலை செய்தேன் என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளான். ஆனால், அன்று முதல் இன்று வரை நமது வரலாற்று? அறிஞர்களில் பல பேருக்கு ஏன் குழப்பம் ஏற்படுகின்றது என்று புரியவில்லை. பொதுவாக தேசியம் என்ற கருத்து மூளைக்குள் புகுந்து விட்டாலே உண்மையை மறைத்து கற்பிதங்களைக் கட்டமைக்க வேண்டியவர்களாகிவிடுகின்றனர்.

"ஆங்கில சத்ருக்கள் நமது தேசத்தைப் பிடுங்கிக் கொண்டு அழியாத ஸனாதான தர்மத்தைக் காலால் மிதித்துத் துவம்சம் செய்து வருகின்றார்கள்".

"எங்கள் ராமன், சிவாஜி, கிருஷ்ணன், குருகேவிந்து, அர்ஜீனன் முதலியவர் இருந்து தர்மம் செழிக்க அரசாட்சி செய்து வந்த தேசத்தில்"

(இந் நூலில் 31ம்பக்கம்)

மேலே கூறப்பட்டுள்ள வரிகள் கலெக்டர் ஆஷ் அவர்களைக் கொலை செய்வதற்கான காரணங் களை எழுதியுள்ள வாஞ்சி அய்யரின் கடிதத்தின் சில வரிகள். அந்தக் கடிதத்தில் மிகத் தெளிவாக எழுதிவிட்டான். "அழியாத ஸனாதான தர்மத்தை" என, இதற்கு மேல் இங்கு ஆராய்ச்சி செய்வதற்கு ஒன்றுமில்லை. வாஞ்சியின் கோபம் இந்தியாவைச் சுரண்டுகின்றார்கள் என்று வரவில்லை. மாறாக தங்களின் ஆரிய ஆதிக்கத்தை அழிக்கின்றார்கள் என்றுதான் வந்துள்ளது.

ஆனால் இவ்வளவு புரியும்படி கடிதம் எழுதி வைத்திருந்தாலும் நமது இடதுசாரித் தோழர் களுக்கு இன்றுவரை வாஞ்சியின் மீதான பாசம் குறைவதில்லை. மேலும் இராமன், கிருஷ்னன், சிவாஜி, அர்ஜீனன் போன்றோர்கள் எந்த தர்மத்தைச் செழிக்க வைக்க ஆட்சி செய்தார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அவர்கள் நான்கு வர்ணங்களைப் பாதுகாக்கும் ஆட்சிதான் நடத்தினார்கள் என்பதும் சிவாஜியைத் தீட்டுக் கழித்துத்தான் மன்னராக மாற்றினார்கள் என்பதும் வரலாறு. ஆக வாஞ்சியின் கோபம் முழுக்க முழுக்க ஜாதி வெறியே தவிர சுதந்திர வேட்கை அன்று.

**கலெக்டர் ஆஷ் செய்த குற்றமென்ன?**

கலெக்டர் ஆஷ் அவர்கள் ஆங்கிலேயர் கிடையாது. அவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐரிஸ் இனத்தவர் ஆவார். ஆங்கிலேயர் அல்லாத அயர்லாந்து தேசத்தைச் சார்ந்த ஆஷ் அவர்களைக் கொல்ல காரணம் என்ன என்பதை மிக விரிவாக இந்நூலில் விளக்கியுள்ளார். குறிப்பாக அன்றைய காலகட்டத்தில் நடைபெற்ற கோரல் மில் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களைத் துப்பாக்கிச் சூட்டிற்க்கு உத்தரவிட்டவர் என சில குற்றச்சாட்டுகள் உள்ளன. அவை அனைத்தும் இட்டுக் கட்டப்பட்டவை என ஆசிரியர் ஆதாரங்களோடு நிருபிக்கிறார்.

கோரல் மில் துப்பாக்கிச்சூட்டின் போது 'வின்ச்' என்ற ஆங்கிலேயர்தான் கலெக்டர். ஆஷ் அவர்கள் சப் கலெக்டர். ஒரு சப் கலெக்டரால் துப்பாக்கிச்சூட்டிற்கு உத்தரவு போட முடியாது என்பது சட்டம். மேலும் கோரல் மில் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய வ.உ.சி அவர்களுக்குத் தண்டனை வழங்கிய நீதிபதி 'பின்ஹே' ஒரு ஆங்கிலேயர். ஆக துப்பாகிச் சூட்டிற்குக் காரணமான கலெக்டர் மற்றும் போராட்டக்காரர்களைத் தண்டித்த நீதிபதி என இரண்டு ஆங்கிலேயர்களையும் சுடாமல் ஆஷ் அவர்களைச் சுட வேண்டிய காரணம் என்ன? என இந்த நூலின் ஆசிரியர் கேள்விக்கு தேசியவாதிகளின் பதில் என்ன? வாஞ்சியின் கடிதத்தில் கூறியது போல ஸனாதான தர்மத்தை மீறிவிட்டாரா கலெக்டர் ஆஷ் அவர்கள்?

**'ஒரு பைசாத் தமிழன்' ஏட்டால் பாராட்டப்பட்ட ஆஷ்**

ஆஷ் படுகொலையின் வழக்கு விபரங்கள், நீதிமன்ற விசாரணை என பல செய்திகளை புள்ளி விவரத்துடன் பதிவு செய்துள்ளார். அதில் எங்கேயும் ஆஷ் மக்களிடம் கொடுமையாக நடந்து கொண்டார் என எந்த குற்றச்சாட்டும் இல்லை. மேலும் அன்றைய பத்திரிகைச் செய்திகள் கூட ஆஷ் அவர்களை நல்ல நிர்வாகியாகப் பதிவு செய்கிறது. அன்றையக் காலக்கட்டத்தில் தமிழகத்தில் வந்த இரண்டு முக்கியமான பத்திரிக்கைகள் ஒன்று பார்ப்பன நலனுக்காக பாடுபட்ட 'இந்து' ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பாடுபட்ட 'ஒருபைசா தமிழன்' இரண்டுமே கலெக்டர் ஆஷ் அவர்களைப் பற்றி நிர்வாகத் திறம் மிக்கவர் என்றும் இரக்கம், மனிதாபிமானம் உள்ளவர் என்று பதிவு செய்துள்ளது. ஆக இந்தியர்களைக் கொடுமைப் படுத்தவில்லை. மனிதநேய மிக்கவர் என்று அறியப் பட்டவர் ஏன் கொல்லப்பட்டார்?

இந்நூலின் 270ம் பக்கத்தில் "நீதிமன்ற தீர்ப்பு வாசகங்களின் படி, ஆய்வாளர்களின் கடுந்துரைகளின் படி, ஆஷ் கொல்லப்பட்டதற்கும் சதி, சுதேசம், வட இந்திய விடுதலைச்சதி, விடுதலை வேள்வி, சுதந்திரப் போராட்டம் என்ற கருத்தாக் கத்திற்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது"

இந்நூலில் வாஞ்சி பற்றி வந்த அனைத்து நூல்களையும், நீதிமன்ற விசாரனைகளையும் சாட்சியங்களையும் அவர்கள் அடித்த பல்டி களையும் விரிவாக அலசி ஆராய்ந்து மேற்கண்ட வரிகளை பதிவு செய்துள்ளார். அப்படியெனில் ஆஷ் கொலைக்கு அரசியல் காரணம் கிடையாது என நிருபிக்கப்பட்ட பின்பு வேறு என்ன காரணம் இருக்கலாம்? வாஞ்சி அய்யரின் கடிதத்தில் குறிப்பிட்டதைப் போல் அழியாத ஸனாதானத் தர்மத்தை அழித்தாரா கலெக்டர் ஆஷ்?

**திருமதி மேரி ஆஷ்**

ஆஷ் அவர்களின் மனைவி எடுத்த ஒரு மனிதாபிமானச் செயலே கொலைக்கு காரணமென அப்பகுதி மக்கள் சொல்லுகின்ற வாய்வழிச் செய்தி பற்றி இந்த நூலின் 272ம் பக்கத்தில் பதிவு செய்கிறார்.

"சேரியில் வாழும் சாதியில் கீழான, பிரிவைச் சேர்ந்த(இந்து மதத்தைச் சேர்ந்த) பெண் அக்கிரஹாரத்தின் வழியாகச் சென்றதால் - செல்ல

**ஆஷ் கொலைக்கு அரசியல் காரணம் கிடையாது என நிருபிக்கப்பட்ட பின்பு வேறு என்ன காரணம் இருக்கலாம்? வாஞ்சி அய்யரின் கடிதத்தில் குறிப்பிட்டதைப் போல் அழியாத ஸனாதானத் தர்மத்தை அழித்தாரா கலெக்டர் ஆஷ்?**

வைத்ததால் அக்கிரஹாரத்தின் புனிதம் கெட்டு விட்டது எனத் திரண்ட பிராமணர்கள் கலெக்டர் ஆஷிடம் சென்று, அதற்குக் காரணமான அவரது துணைவியார் செய்த "சமூக விரோதச் செயலுக்கு" மன்னிப்பு கேட்குமாறு கூச்சலிடுகிறார்கள். மன்னிப்பு கேட்க மறுத்து விட்ட ஆஷ், மேலும் தன் துணைவியார் செய்த செயல் சரியானது என்றும் நியாயப்படுத்துகிறார்.

"ஆக அழியாத ஸனாதானத்தைக் காப்பாற்ற வாஞ்சி அய்யர் செய்த கொலைக்கான காரணம் தெளிவாகப் புரிகிறது. மேலும் இன்றும் மருத்துவ மனைக்கும் சேரிக்கும் நடுவில் அக்கிரஹாரம் இருந்ததற்கான ஆதாரம் உள்ளது. ஏன் இது வழக்கின் விசாரணையில் எந்த இடத்திலும் பதிவாக வில்லை. அங்குதான் ஆரியத்தின் மிகப் பெரிய சதி அடங்கியுள்ளது. மிகவும் ஸனாதான வெறி பிடித்த வ.வே.சு அய்யர், பாரதி ஆகியோர் வாஞ்சியின் நெருங்கிய நண்பர்கள் ஏன் கைது செய்யப்பட வில்லை? இந்த வழக்கின் குற்றவாளிகள் 14 பேரில் ஒருவர் நீதிமன்றத்தில் சொல்லியும் பாரதியும் வா.வே.சு அய்யரும் ஏன் கைது செய்யப்படவில்லை?

**பார்ப்பனப் பாசம்**

இந்த வழக்கின் விசாரனை அதிகாரியாக இருந்த சர்.சி.பி. இராமசாமி அய்யரின் இனப்பாசமே காரணம் என நூலாசிரியர் சந்தேகம் எழுப்புகிறார். இந்நூலின் 274ம் பக்கத்தில் "சர்.சி.பி. ராமசாமி அய்யர் இனப்பாசத்தின் அடிப்படையில் இச் செய்தியை முழுமையாக மறைத்திருக்கின்றார் என்று சந்தேகிப்பதற்கு சூழ்நிலைகளும் வாஞ்சியின் கடிதமும் ஆதாரமாக இருக்கின்றது"

மேற்கண்ட செய்தி உண்மையாக இருக்க வாய்ப்பிருக்கிறது. ஏனெனில் இரண்டு நாடார் சமூக இளைஞர்கள் அன்றைய உயர் படிப்பான அய்.சி.எஸ். படித்துவிட்டு திருவாங்கூர் சமஸ்தான திவான் ராமசாமி அய்யரிடம் வேலை கேட்ட போது, இரண்டு தென்னை மரங்களைக் கொடுத்து நீங்கள் மரமேறிப் பிழையுங்கள் என்று சொன்ன ஜாதி வெறியன்தான் இந்த திவான் ராமசாமி அய்யர்.

அந்த அடிப்படையில் பார்த்தோமானால் திருமதி மேரி ஆஷ் அவர்களின் மனிதாபிமானச் செயலுக்கு எதிராக நடந்த கொலை என ராமசாமி அய்யர் பதிவு செய்ய வாய்ப்பில்லை. மேலும் பாரதி, வா.வே.சு க்கள் தப்பிக்க விடப்பட்டுள்ளனர். எனவே இந்தக் கொலை என்பது ஆரிய ஸனாதான தர்மத்தை நிலைநாட்டவே நடந்தது என்பதை விரிவாக பதிவு செய்துள்ளார்.

மேலும் ஆங்கிலேயர்கள் எப்படி ஆரிய பார்ப்பனர்களின் ஸனாதான தர்மத்தை அழிக்க முயற்சித்தார்கள் என்பதை தெளிவாக ஆங்கிலேயர் செய்த சமூக புரட்சிகளையும், அதன் மூலம் இங்குள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், பெண்கள் பயனடைந்தார்கள் என்பதையும் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தைச் சந்தேகக் கண்ணோடு பார்த்த பெரியார், அம்பேத்கர் அவர்களின் சிந்தனை நமக்குத் தெளிவாகிறது. மேலும் வாஞ்சி ஆதரவாளர்களின் புத்தகங்கள், நடுநிலையோடு ஆய்வு செய்யப்பட்ட புத்தகங்கள், நீதிமன்ற ஆவணங்கள் என அனைத்துத் தரப்புச் செய்திகளையும் வைத்து மிகத் தெளிவான ஆய்வை செய்துள்ளார் தோழர் ஜெயராமன். வாஞ்சி அய்யரை ஆதரிக்கும், பாரதியை ஆதரிக்கும் இடதுசாரி, தேசியவாதிகள் இதற்கு பதில் சொல்லுவார்களா? அல்லது வழக்கமான கள்ள மவுனத்தோடு கடந்து செல்வார்களா? சமூக மாற்றத்தை விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக வாசிக்க வேண்டிய நூல் இது.

**நூல் கிடைக்கும் இடம்:**
**விடியல் பதிப்பகம், 23/5, ஏ.கே.ஜி. நகர், 3வது தெரு, உப்பிலிபாளையம் (அஞ்சல்), கோயம்புத்தூர்-641 015**
**விலை - ரூ 250**
**தொடர்புக்கு - 0422-2576772, 9443468758**

ஜாக்குலின்

# மரணத்தின் படிகளுக்கா மாணவர்கள்?




சமீபகாலமாக மாணாவர்களின் தற்கொலை தொடர்கதையாகி வருகிறது. நான்கு +1 மாணவிகளின் கூட்டுத் தற்கொலை, இரண்டு எட்டாம் வகுப்பு மாணவிகளின் தற்கொலை முயற்சி அதில் ஒரு மாணவி மரணம். மருத்துவக் கல்லூரி மாணவி தற்கொலை, அதே மருத்துவக் கல்லூரி மாணவர் அடுத்த வாரத்திலேயே தற்கொலை. இவை எல்லாம் தற்போதைய நிகழ்வுகள்.நாம் மறந்தவை ஏராளம்.

இது மட்டுமல்ல வகுப்பறையில் ஆசிரியை யைக் கொல்ல முயற்சி, சக மாணவனைக் கொல்ல முயற்சி போன்ற நிகழ்வுகளையும் சேர்த்தே நாம் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். ஆம் தற்கொலை, அதற்கான முயற்சி, கொலைக்கான முயற்சி அனைத்தையுமே சேர்த்துப் பார்க்க வேண்டும்.

மாணாக்கனின் மரணங்கள் பள்ளி மற்றும் கல்வி நிலையங்கள் சார்ந்திருப்பதால் முதலில் பள்ளிகளில் உள்ள காரணங்கள் என்னவாயிருக்கும் என்பதை யோசித்துப்பார்ப்போம். ஒரு விசயத்தை அனைவரும் பார்த்திருப்போம். பள்ளிக்குச் செல்லும் நேரத்தில் குழந்தைகளின் விருப்ப மின்மையும் பள்ளி விட்டதும் குதுகலிக்கும் மகிழ்ச்சி யையும்தான். பள்ளி என்பது புதிய விசயங்கள் கற்றுக் கொடுக்குமிடம் அப்படிப்பட்ட இடத்திற்குச் செல்ல குழந்தைகள் ஏன் விரும்புவ தில்லை? அந்த விருப்பமின்மை, அதன் மகிழ்ச்சியைக் களவாடும் இடம் மரணக் கூடாரங்களாகிப் போவதன் காரணம்.?

### மரணங்களுக்குக் காரணமான பார்ப்பனக் கல்விமுறை

முதலில் கல்வி என்பது அறிவுக்காக என்ற நிலை 100 சதவீதம் தற்போது இல்லை என்பதே உண்மை. கல்வி கற்று அதிக மதிப்பெண் வாங்கி உயர்கல்வி கற்று பெரிய அல்லது பாதுகாப்பான பணி ஒன்றில் சேர வேண்டும். இதுதான் இன்றைய பெற்றோருடைய இலட்சியம். இப்போதுதான் கல்வி சரக்காகிப்போகிறது. கல்விக்கூடம் கல்விச் சரக்கு விற்கும் நிலையமாகிப் போகிறது. மனப்பாடம் என்கிற பார்ப்பனக் கல்வி முறை (குரு குல) தலை தூக்குகிறது. இதற்கான முதல் பலிகள் விளை யாட்டும் பொழுதுபோக்குகளும்தான்.

விளையாட்டுகளில் தோற்று பின் வென்று, தோற்று; வெற்றி தோல்வி என்பது சகஜம் என்கிற மனப்பக்குவம் அடையும் நிலை இப்போது இல்லை. இதன் காரணமாகவே தோல்விக்கு அடுத்து மரணம்தான் என்கிற எண்ணம் உருவாகிறது.

அதிகாலை முதல் இரவு வரை படிப்புதான். இன்னும் சொல்லப்போனால் தனிப்பயிற்சிக்குச் (Tuition ) செல்லாத மாணவன் கல்வியிலிருந்து வெளித்தள்ளப்படுவான் என்கிற மன நிலைதான் ஏறக் குறைய எல்லோருக்கும் ( உண்மை அதற்கு நேர் மாறானது. புரிந்து படிப்பவர்களே மேலும் மேலும் கற்கின்றனர்).

இதன் காரணமாக ஏற்படும் மனஉளைச்சல் மன அழுத்தமாகிப்போகிறது. இடைவேளை நேரங்களும் படிப்புக்காகக் குறைக்கப்பட்டு அந்த நேரங்களில் இருந்தக் களிப்புகளும், மன இளைப் பாறுதலும் களவாடப்படுகின்றன. இவற்றின் காரணமாக நட்பு என்பது குறைந்து போவதும் ஒரு ஆபத்தே! இவ்வாறு உடற்பயிற்சி அல்லது விளை யாட்டு போன்ற ஆற்றல் விரையச் செயல்பாடுகள் (Energy Waste Activity) எதுவும் இல்லாததால் ஏற்படும் அடுத்த சிக்கல் சற்று அளவு கடந்த பாலுணர்ச்சி.

ஏற்கனவே பாலியல் கல்வியற்ற சமூகத் திலிருந்து வரும் குழந்தைகள் மனக் குழப்பத்துக்கு உள்ளாகி கல்வி கற்பதில் கவனம் குறைகின்றனர். மேலும் தான் இச்சமூகத்துக்கு லாயக்கில்லாதவன் என்கிற குற்ற உணர்ச்சிக்கு ஆளாகிறான்(ள்). இயல்பாக ஏற்படும் உணர்ச்சிகள், பாலின ஈர்ப்பு இவை குற்றங்களாகப் பார்க்கப் படுவதும் மனக் குழப்பத்திற்கு வழிவகுக்கிறது.

தமிழ் வழி கற்கும் மாணவர்க்குச் சுமையே ஆங்கிலம்தான். அதற்கடுத்துதான் கணிதம். (சாதாரண நகரங்களில் உள்ள பல ஆங்கில வழிக்கல்வி கற்கும் மாணவர்களுக்கும் ஆங்கிலமும் தமிழும் சிக்கலே! ). கற்பவர்களில் பின்தங்கியவர் களுக்கும், மீதிறனுக்கும் ஒரே பாடத்திட்டம், தேர்ச்சிக்காக ஆசிரியர்களுக்கு அதிகப் பணிச்சுமை இவையும் மாணவரைப் பாதிக்கும் காரணிகளே!

கற்கும் மாணவனின் திறனறிந்து அவன் திறன் சார்ந்த கல்விக்கு மதிப்பெண் வழங்கும் முறை இருப்பின் பல திறன் உள்ள மாணவர்கள்

சமூகத்துக்கும் கிடைப்பார்கள். இப்படி தன்னம்பிக்கை இழப்பும் ஏற்படாது. அதாவது எல்லோருக்குமான கல்வியாய் இருத்தல் வேண்டும். தற்போதுள்ள தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியைக் கற்பிக்கும் முறையிலும் கொண்டு வர வேண்டும். புத்தகச் சுமையைக் குறைத்து மொபைல் ஆப், இணையவழிக் கல்வி போன்றவற்றைப் பயன்படுத்தலாம். தற்போதைய குழந்தைகள் இவற்றில் திறம்பட செயல்படுவது கண்கூடு.

அடுத்து,நான்கு +1 பெண் குழந்தைகளும், இரண்டு எட்டாம் வகுப்பு பெண் குழந்தைகளின் தற்கொலை மற்றும் முயற்சியின் காரணங்களாகச் சொல்லப்படுபவை ஆசிரியர்கள் பெற்றோரைச் சந்திக்க வேண்டும் என்று சொன்னதால்தான். ஆசிரியர் பெற்றோரைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டவுடன் குழந்தைகள் இம்முடிவெடுப்பதன் காரணம்?

பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு தொடர்பு, இணைப்பு இல்லாமையே முதற் காரணம். இதற்குக் காரணம் இன்றைய நெருக்கடியான காலகட்டம்தான். பிள்ளைகளின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் பள்ளிகள் எப்படி முக்கியமோ, அதே போல் சமூகமும் முக்கியம். குழந்தைகளுக்குச் சமூகம் என்பது பெரும்பாலும் அவர்களது பெற்றோரே! ஆனால் பெற்றோர் நிலை??

**மரணங்களுக்குக் காரணமாகும் பார்ப்பனியக் குடும்பச்சூழல்**

குடும்பச் சூழலும் குழந்தைகளின் வாழ்வுக்கு, தன்னம்பிக்கைக்கு, மனச்சிக்கலுக்கு முக்கிய காரணி.

**ஒப்பீடு:** மற்ற குழந்தைகளோடு ஒப்பிட்டுக் குற்ற உணர்வை உண்டாக்குதல்,

**திட்டுதல்:** படிப்பில் கவனம் இல்லாத குாந்தைகளின் காரணத்தை அறிந்து கொள்ளாமலேயே திட்டுவது.

**காது கொடுக்காமை:** அம்மா, அப்பாவிடம் சுதந்திரமாக எதுவும் கலந்துரைடல் இல்லாமல் இருப்பது.

**கௌரவம்:** குழந்தைகளின் மதிப்பெண், படிப்பு போன்றவையே தன் குடும்பக் கௌரவம் என்று இருப்பது.

**தனிமைப்படுத்துதல்:** பிள்ளைகளை அருகில் வைத்து படிக்க வைக்காமல் விடுதியில் தங்கவைத்துக் படிக்க வைத்தல்.

**ஒற்றுமையின்மை:** குழந்தைகளைப்பற்றி முடிவு அல்லது குழந்தைகளின் விருப்பம் ஆகியவற்றில் கணவன் மனைவிக்குள் இருக்கும் ஈகோவைக் காண்பிப்பது.

**Ego:** ஒரு பிள்ளையை பெற்று விட்டோம் நாம் அனுபவிக்காமல் சிரமப்பட்டதுபோல் நம் குழந்தை சிரமப்படக் கூடாது என்று கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து முரட்டு பிடிவாதமுள்ள ஈகோ பிடித்த பிள்ளைகளாக்கிவிடுதல்,

**துணிவின்மை:** பள்ளி விட்டால் வீடு, வீடு விட்டால் பள்ளி என்றே வளர்த்து முக்கியமாகப் பெண் குழந்தைகளை மனதளவில் கோழைகளாக வளர்த்தல்,

**அழகுணர்ச்சி:** வீடுகளில் அழகு அலங்காரம் என்றே வளர்த்து பெண் குழந்தைகளின் பெரும்பாலான நேரம் தங்களது அழகு பற்றியே கவலை கொள்ளும் பண்பை வளர்த்தல்,

**போதை பழக்கம்:** குடிப்பழக்கத்திற்கு அடிமையாவதால் அக்குடும்பத்துக் குழந்தைகளின் இரவை ரணமாக்குவது ( இது பெரும்பாலும் தற்போது கிராமங்களில் உள்ள பார்ப்பனரல்லாதோர் குடும்பங்களில் மிகப்பெரும் சிக்கலாக உருவெடுத்து உள்ளது ).

**பாலியல் புரிதல்:** பெற்றோருக்கே பாலியல் புரிதல் இல்லாத காரணத்தால் ஏற்படும் சிக்கல்கள்.

**நேர விரயம்:** குழந்தைகளோடு கிடைக்கும் ஓரிரு நாள் விடுமுறையையும் கோவில், குளம், தர்கா என்றழைத்துச் சென்று தங்கள் பிள்ளைகளோடு மனம் விட்டு பேசுவதைக் கெடுத்தல்.

**இது போன்ற சூழலில் வாழும் குழந்தைகள் தங்களுக்குள் ஏற்பட்டுள்ள சிக்கலை எந்தத்துணிவுடன் பெற்றோருடன் பகிரும்? தாம் கேவலப்படுத்தப் படுவோம் என்பதால் இந்தச் சமூகத்தை எதிர்க் கொள்ள பயந்து இம்முடிவை எடுக்கின்றனர். ஆனால் ஊடகங்களோ, பெற்றோரோ இன்றையக் கல்விச் சூழல் தம் வாழ்க்கைச் சூழல் போன்றவற்றைக் கணக்கிலெடுக்காமல் ஆசிரியர்களின் மீது பாய்வது எப்படிச் சரியாகும்?**

**இப்படிப்பட்ட சூழலில் ஆசிரியர்களில் பலர் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணிக் கண்டிப்பதா அல்லது எதாவது சிக்கலாகிவிடும் என்பதால் அமைதியாகிவிடுவதா என மனசாட்சியோடு மோதிக் கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மை!**


**பள்ளிச்சூழல் ஆசிரியர்களையும் மாணாக்கர்களையும் இணக்கமாக்கும் சூழலாய் இருத்தல் வேண்டும். மனம்விட்டுப் பேச பெற்றோரும் பக்குவமடைய வேண்டும்! இல்லா விட்டால் அமெரிக்காவில் நடை பெறுவது போன்ற பள்ளிகளில் துப்பாக்கிச் சூடு போல் நம் நாட்டிலும் நடக்கும் நாள் வெகுத் தொலைவில் இல்லை!!**

# பெண்கள் சமையல் செய்யக் கூடாது!

## தோழர் பெரியார்

...நான் பொதுத் தொண்டையே முக்கியமாகக் கருதுபவன் ஆனதனாலே, நம் மனித சமுதாயம் முன்னேற வேண்டும் என்பவன் ஆனதனாலே, பழைமைகளில் எல்லாம் நம்பிக்கை இல்லாதவன் ஆனதனாலே என் கண் முன்னே நடக்கும் நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு, அதன்படி மனிதன் முன்னேற வேண்டுமென்று நினைப்பவனாவேன்.

புலவர் அவர்கள் நேற்று, சுமார் அய்ந்து ஆண்டுகளுக்கு முன் நம் கண் முன்னிருந்த பாரதிதாசன் அவர்களின் கதையை எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்கும்போது எனக்கே மிக ஆச்சரியமாக இருந்தது. அவ்வளவு தெளிவாக உண்மையை எடுத்துக் கூறி இருக்கிறார். நமக்கு என்னென்ன தேவை என்பதை எடுத்து விளக்கி இருக்கிறார். இதையெல்லாம் நம் மக்கள் படித்துத் தெளிவடைய வேண்டும். நம் உண்மை நிலையை உணர வேண்டும், திருந்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இன்றைக்கு நமக்கு என்ன வேண்டுமென்பது வள்ளுவனுக்கு எப்படித் தெரியும்? இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னே இருந்தவனுக்கு மனிதன் எப்படி ஆவான் என்பது எப்படித் தெரியும்?

அதற்கு முன் பெண்களைப் பார்த்தாலே அவள் அணிந்திருக்கும் நகை - உடைகளை வைத்து, அவள் எந்த ஜாதியைச் சேர்ந்தவள் என்று சொல்ல முடியும். இப்போது யாரைப் பார்த்தாலும் ஒன்றாகவே தோன்றுகிறது. புரிந்து கொள்ள முடியவில்லை. அவ்வளவு வளர்ச்சியடைந்து விட்டது.

தாலி எதற்காகக் கட்டப்படுகிறது என்பதை நம் பெண்கள் இன்னும் உணரவில்லை. ராஜா மனைவியாக இருந்தாலும், பெரிய ஜமீன்தார் மனைவி - பணக்காரர் மனைவி என யாராக இருந்தாலும், அவன் செத்தவுடன் அறுப்பதற்காகத் தானே அந்தப் பெண்ணை முண்டச்சியாக்கத் தானே பயன்படுகிறது. வேறு எதற்குத் தாலி பயன்படுகிறது?

100-வருடங்களுக்கு முன் வரை உடன் கட்டை ஏறும் வழக்கம் இருந்து வந்தது. அது மதப்படி ஒரு சடங்காகச் செய்யப்பட்டு வந்தது. வெள்ளைக்காரன் வந்து அது கொலைக் குற்றம் என்று ஆக்கியபின் தான் நின்றது. இப்போது என்ன சொல்கிறோம், இப்படி ஒரு காட்டுமிராண்டிக் காலமா இருந்தது? என்று எண்ணுகின்றோம், ஆச்சரியப்படுகின்றோம். அதுபோல் தான் நாளைக்கு வரும் பெண்கள் நினைப்பார்கள். பெண்களுக்குத் தாலி கட்டும் பழக்கம் கூடவா இருந்தது என்று!

நாட்டிலே காட்டு மிராண்டித் தன்மைகள், கொடுமைகள் நிறைந்து விட்டன. பார்ப்பான் வந்தான், அவன் யோசனை சொல்பவனாக ஆகி விட்டான்.

பெண்கள் ஆண்களின் சொத்துகள். அவன் சொல்படி நடந்து கொள்ள வேண்டியவர்கள் என்றும் ஆக்கி விட்டான். நம் இலக்கியம், புராணம் இவற்றில் வரும் பெண்களை அடிமைகளாகவே காட்டி விட்டான். கண்ணகி - அரிச்சந்திரன் - திரவுபதி இந்தக் கதைகள், பெண்கள் அடிமை களாகவே இருக்க வேண்டும், கணவன் சொல்படியே நடந்து கொள்ள வேண்டும், அதுதான் பெண்கள் கற்புடையவர்கள் என்பதற்கு இலக்கணம். இது போன்று நடக்கிற பெண்கள் தான் மோட்சத்திற்குப் போக முடியும் என்று எழுதி வைத்து விட்டான்.

இந்தக் கதை எழுதினவனெல்லாம் முட்டாள் என்று கூடக் கருத முடியவில்லை. மகா அயோக்கியன்கள் என்று தான் கருத வேண்டி இருக்கிறது! அந்தக் காலத்து முட்டாள் கதை எழுதினான் என்றால், இந்தக் காலத்து முட்டாள் அவற்றுக்குச் சிலை வைக்கிறான்.

இந்த நாடு - காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து விலகாமல் மக்களைச் சிந்திக்க விடாமல்

பாதுகாத்து, முட்டாள்களாக்கவே பாடுபடுகின்றார்கள். அதனால் தான் நம் நாடு இன்னமும் முன்னேற்றமடையாமல் காட்டுமிராண்டி நிலையிலேயே இருக்கின்றது. தமிழன் பண்பாடு - தமிழின நன்மை - தமிழின வாழ்வு என்று போனால், இன்னும் 2,000 ஆண்டுகளுக்குப் பின் தானே செல்வோம். ஓர் அடி கூட முன்னே செல்ல முடியாதே!

தனக்கு வேண்டிய கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடிய உரிமை கூட பெண்களுக்கு இல்லை என்றால், இது என்ன சுதந்திரம்? ஆறறிவுள்ள மனிதனுக்கு இதுதானா பயன்? பெரிய குறை - பெண்கள் அடிமையாக இருந்ததற்குக் காரணம் பெண்களுக்குக் கல்வி அறிவு, படிப்பு வாசனை இல்லாமல் செய்ததே யாகும். பெண்கள் படித்தாலே கெட்டு விடுவார்கள் என்று ஒரு தவறான கருத்தே நீண்ட காலமாக மக்களிடமிருந்து வந்தது. எதுவரை இருந்தது என்றால், வெள்ளைக்காரன் வந்து 150-வருடம் வரை நம்மை ஆட்சி செய்தும், பெண்கள் படிக்கவேயில்லை. 30, 40-ஆண்டுகளுக்கு முன்பு நம் உணர்ச்சி கிளம்பிய பிறகுதான் பெண்கள் படிக்கவே ஆரம்பித்தனர்.

பெண்கள் உருப்படியாக வேண்டுமானால், இத்திருமண முறையையே உடன்கட்டை ஏறுதல் போல் சட்டம் கிரிமினல் குற்றமாக்க வேண்டும். அப்போது தான் பெண்கள் சமுதாயம் சுதந்திரம் பெற்று சமுதாயத்திற்குப் பயன்பட முடியும்.

இப்போது அரசாங்கத்தில் பெண்களின் திருமண வயது வரம்பை 21-க்கு உயர்த்திச் சட்டம் கொண்டு வர இருக்கிறார்கள். இதற்கு அரசாங்கம் சொல்லும் காரணம், 21-வயதில் திருமணம் செய்தால் மூன்று குழந்தைகள் குறையும் என்பதாகும். நாம் சொல்வது அது மட்டுமல்ல, பெண்கள் அந்த வயதுக்குள் நல்ல கல்வி கற்று, தாங்களே உத்தியோகம், தொழில் செய்யும் அளவுக்கு அறிவு பெற்று விடுவர். அதன் பின் தனக்குத் தேவையான ஒத்த உரிமையுள்ள, தனக்கு ஏற்ற துணைவனைத் தாங்களே தேர்ந்து எடுத்துக் கொள்ளக் கூடிய தன்மையும் பெற்று விடுவார்கள் என்பதுதான்.

தாய்மார்கள் தங்கள் பெண்களை நிறையப் படிக்க வைக்க வேண்டும். அதோடு ஒரு தொழிலையும் கூடக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் தாங்களாகவே தங்கள் வாழ்வை நடத்தக் கூடிய வருவாய் கிடைக்கும்படியான நிலைமை பெற வேண்டும். பெண்கள் கெட்டுப் போவார்கள் என்ற எண்ணமே பெற்றோர்களுக்கு இருக்கக் கூடாது.

பெண்கள் இனி சமையல் செய்யக் கூடாது. பின் எப்படி என்றால், ஹோட்டலுக்கு, ரெஸ்டாரென்ட்டுக்குப் போய் தங்கள் உணவை முடித்துக் கொள்ள வேண்டும். அப்படி ஆரம்பித்தால் நல்ல ரெஸ்டாரன்ட்டுகளும் ஏற்பட்டு விடும். வெளி நாடுகளில் எல்லாம் அப்படித்தான்! ஆணும், பெண்ணும் தங்கள் தங்கள் வேலைக்குச் சென்று விடுவார்கள். தங்குவதற்கு ஒரு அறையையே வாடகைக்கு எடுத்துக் கொள்வார்கள். அதற்குள் ஒரு பீரோ, கட்டில், இரண்டு நாற்காலிகள் இவை தான் இருக்கும். பொதுவான குளியலறையும் - கக்கூசும் இருக்கும். இரவு தூங்குவார்கள். தேவைக்குப் பொது குளியலறை கக்கூசைப் பயன்படுத்திக் கொள்வார்கள். இதனால் ருசியான உணவு கிடைக்கிறது; வீட்டு வாடகை குறைகிறது; நேரம் மிச்சமாகிறது; உணவிற்காகச் செலவிடும் பணமும் குறைகிறது.

இன்னும் கொஞ்ச நாள் போனால், பொது உணவு விடுதிகளில் உண்ணும் முறை தான் இங்கு வரும். இதுதான் சுலபமானதாகும்.

நாம் உடை - நகை இவற்றுக்கு நிறைய செலவிடுகின்றோம். பெண்களுக்கு எவ்வளவுக் கெவ்வளவு நகை - உடை ஆசை ஏற்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அடிமை உணர்ச்சி தான் ஏற்படுமே ஒழிய, சுதந்திர உணர்ச்சி ஏற்படுவது கிடையாது.

...இறுதியாகக் குழந்தைகள் அதிகம் பெறுவது பெரும் கேடாகும். இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இன்றைக்கு அரசாங்கமே இதனை உணர்ந்து, பல திட்டங்களைப் போட்டு அதிகக் குழந்தைகள் பெறாமல் தடுக்க மருத்துவ வசதிகள் செய்திருக்கின்றது. அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதிகக் குழந்தைகள் பெறுவதுதான் அவன் தன்னையும் தியாகம் செய்து, தனது மனைவியையும் தியாகம் செய்து ஒழுக்கக் கேடான காரியங்களிலும் ஈடுபடச் செய்கிறது. ஓரளவாவது சுதந்திரத்தோடு, பிறர் கையை எதிர்பார்க்காமல், கவலையற்று வாழ வேண்டுமானால் அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

மேலும் மணமக்கள் மூட நம்பிக்கையான கோயில் - குளம் - பண்டிகை - உற்சவம் இவற்றுக்குச் செல்லக் கூடாது. மிருக உணர்ச்சியைத் தூண்டும் சினிமாவிற்குச் செல்லக் கூடாது. வேண்டுமானால், கண்காட்சிகளுக்குச் சென்று பெரிய பெரிய இயந்திரங்கள் வேலை செய்யும் நெய்வேலி போன்ற நகரங்களுக்குச் சென்று அவை எப்படி வேலை செய்கின்றன என்பதையெல்லாம் பார்த்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**தோழர் பெரியார், விடுதலை, 20.02.1968**

# தோழர் பெரியாரின் நினைவு நாள் டிசம்பர் 24

# இராமனைச் சீதை, அற்பத்தனமானவன் என இகழ்ந்திடுவது இயல்பே

## தோழர் அம்பேத்கர்

இராமனுடைய பிறப்பே அதிசயமாக உள்ளது. சிருங்க முனிவரும் கௌசல்யாவும் கணவன், மனைவி என்ற உறவு கொண்டிருக்க வில்லையாயினும் இந்த முனிவன் மூலம் தான் கௌசல்யா இராமனைப் பெற்றெடுத்தாள் எனத் தெளிவாகத் தெரியும் ஓர் உண்மையை மூடி மறைப்பதற்காகவே சிருங்க முனிவன் பிடித்துக் கொடுத்த பிண்டத்தின் மூலம் கௌசல்யா இராமனைப் பெற்றெடுத்தாள் என்று சொல்லப் பட்டிருக்கலாம். இராமனுடைய பிறப்பில் களங்கம் எதுவுமில்லை என்று வாதிக்கப்பட்ட போதிலும், அவனது தோற்றம் இயற்கைக்கு முரணானது என்பது உறுதியாகின்றது.



இராமனுடைய பிறப்புத் தொடர்பான மறுக்க முடியாத அருவெறுப்பான வேறு பல நிகழ்ச்சிகளும் உள்ளன.

இராமாயணக் கதையின் தொடக்கத்திலேயே தசரதனின் மகன் இராமனாகப் பிறப்பதற்கு உடன்பட்டும் அதன்படி விஷ்ணுவே இராமனாக அவதரித்ததாக வால்மீகி கூறுகிறார். இதனைப் பிரம்மதேவன் அறிகின்றான். விஷ்ணு இராமாவதாரம் எடுத்துச் சாதிக்க விருக்கும் காரியங்கள் யாவும் வெற்றியுடன் முடிய வேண்டுமானால் அவனோடு ஒத்துழைத்து உதவக் கூடிய வல்லமை மிக்க துணைவர்கள் இருக்க வேண்டும் என்பதையும் பிரம்மன் உணர்கின்றான். ஆனால் அத்தகைய துணைவர்கள் எவரும் அப்போது இருக்கவில்லை.

இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காக கடவுள்கள், பிரம்ம தேவனின் கட்டளையை ஏற்று விலைமாதர்களான அப்சரசுகள் மட்டுமின்றி யக்ஷர்கள், நாகர் ஆகியோரின் மணமாகாத கன்னிப் பெண்கள் மட்டுமின்றி முறையாக மணமாகி வாழ்ந்து கொண்டிருந்த ருக்ஷா, வித்யாதர், கந்தர்வர்கள், கின்னரர்கள், வானரர்கள் ஆகியோரின் மனைவியரையும் கற்பழித்து, இராமனுக்கு துணையாக அமைந்த வானரர்களை உருவாக்கினர்.

இத்தகைய வரம்பு மீறிய ஒழுக்கக்கேடானது இராமனுடைய பிறப்பு அல்ல என்றாலும், அவனுடைய துணைவர்கள் பிறப்பு அருவெறுப்புக் குரியது. இராமன், சீதையை மணந்ததும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதல்ல. பௌத்தர் களின் இராமயணத்தின்படி சீதை, இராமனின் சகோதரியாவாள். சீதையும், இராமனும் தசரதனுக்கு பிறந்த மக்கள். பௌத்த இராமாயணம் கூறும் இந்த உறவு முறையை வால்மீகி இராமாயணம் ஏற்கவில்லை.

வால்மீகியின் கூற்றுப்படி விதேக நாட்டு மன்னனான ஜனகனின் மகள் சீதை என்றும், அவள் இராமனுக்கு தங்கை உறவு உடையவள் அல்ல என்றும் ஆகின்றது. சீதை ஜனகனுக்கு பிறந்த மகள் அல்லவென்றும், உழவன் ஒருவன் தன் வயலில் கண்டெடுத்து ஜனகனிடம் அளித்து வளர்க்கப்பட்ட வகையிலேயே சீதை ஜனகனுக்கு மகளானாள் என்றும் கூறப்பட்டிருப்பதால் வால்மீகி இராமாயணத்தின் படியே கூட சீதை, ஜனகனுக்கு முறையாகப் பிறந்த மகள் அல்ல என்றாகிறது. எனவே பௌத்த இராமாயணம் கூறும் கதையே இயல்பானதாகத் தோன்றுகின்றது.

அண்ணன் தங்கை உறவுடைய இராமனும் சீதையும் திருமணம் செய்து கொண்டதும் ஆரிய திருமண வழக்கத்திற்கு மாறானதுமல்ல. (ஆரியர்களிடையே அண்ணன் தங்கையை மணந்து கொள்ளும் வழக்கமிருந்தது). ஆயின் இந்தக் கதை உண்மையானால் இராமன், சீதை திருமணம் பிறர் பின்பற்றுவதற்கு தக்கது அல்ல எனலாம். இராமன் 'ஏக பத்தினி விரதன்' என்பது ஒரு சிறப்பாக கூறப்படுகின்றது.

இத்தகையதொரு அபிப்ராயம் எவ்வாறு பரவியது என்பது புரிந்துகொள்ள முடியாததாகவே உள்ளது. வால்மீகியே கூட தன் இராமாயணத்தில் இராமன் அநேக மனைவியரை மணந்து கொண்டதை குறிப்பிடுகிறார் (அயோத்தியா காண்டம், சருக்கம் 8, சுலோகம் 12). மனைவியர் மட்டுமல்ல வைப்பாட்டியர் பலரையும் இராமன் வைத்திருந்தான்....

**இனி இராமன் தன் சொந்த மனைவியான சீதையை நடத்திய விதத்தை காண்போம்.**

சுக்ரீவனும், அனுமானும் இராமனுக்காக திரட்டிய (வானர) சேனையோடு இலங்கை மீது இராமன் படையெடுக்கிறான். அப்போதும் வாலி-சுக்ரீவன் ஆகிய இரு சகோதரர்களிடையே கையாளப்பட்ட மிகக் கேவலமான வழிமுறையைத் தான் இராமன் கையாளுகிறான். பேரரசன் இராவணனையும் அவன் மகனையும் கொன்று விட்டு இராவணனுடைய தம்பி விபீஷணனை அரியணை ஏற்றுவதாய்ச் சொல்லி விபீஷ்ணனின் உதவியைப் பெறுகிறான். அதன்படி இராவணனையும் அவனுடைய மகன் இந்திரஜித்தையும் இராமன் கொன்று விடுகின்றான்.

போர் ஓய்ந்தபின் இராமன் செய்கிற முதற் காரியம் பேரரசன் இராவணனின் உடலை நல்லடக்கம் செய்வது தான். அதன் பின்னர் இராமனின் நோக்கமெல்லாம் விபீஷணனை அரியணையிலேற்று வதிலேயே இருந்தது. ஆட்சி அரங்கேறிய பின், தானும் இலட்சுமணன் சுக்ரீவன் ஆகியோரும் சுக மகிழ்வோடு இருப்பதாகவும் இராவணன் கொல்லப்பட்ட சேதியையும் அனுமான் மூலம் சீதைக்கு அனுப்புகிறான்.

இராவணனை நல்லடக்கம் செய்த பின் இராமன் செய்திருக்க வேண்டிய முதற் காரியம் ஓடோடிச் சென்று தன் மனைவி சீதையை சந்தித்திருக்க வேண்டும். அவன் அப்படிச் செய்ய வில்லை. சீதையை சந்திப்பதைக் காட்டிலும் விபீஷணனை அரியணையிலேற்றுவதிலேயே அவன் அதிக ஆர்வம் காட்டுகிறான். விபீஷணனை ஆட்சியிலமர்த்திய பிறகும் கூட சீதையைக் காண அவனே போகவில்லை. அனுமானைத்தான் அனுப்புகிறான். அனுமன் மூலம் அவன் அனுப்பும் சேதிகள் தான் என்ன? சீதையை அழைத்து வா என்று அனுமனிடம் சொல்லவில்லை. தாமும் தம் தோழர்களும் சகல நலத்தோடிருப்ப தாக சீதைக்கு சொல் என்றுதான் சேதி அனுப்புகிறான். இராமனை சந்திக்க வேண்டுமென்ற பேராவலை சீதைதான் அனுமன் மூலம் சொல்லியனுப்புகிறாள். தன்னுடைய சொந்த மனைவி சீதை. இராவணன் அவளைக் கடத்திக் கொண்டுபோய் சிறைப்படுத்தி பத்து மாதங்களுக்கு மேலாகிறது. இருந்தும் தனிமையிலிருந்த சீதையைக் காண இராமன் போகவில்லை.

சீதையை இராமன் முன் கொண்டு வருகிறார்கள். அவளைப் பார்த்த போதாவது இராமன் சொன்னதென்ன? மனித மனம் படைத்த பாமர மனிதன் கூட துயரம் கவ்விய நிலையிலுள்ள மனைவியிடம் இராமன் சீதையிடம் நடந்து கொண்டதைப் போல நடந்து கொண்டிருப்பானா என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிகழ்ச்சியாய்த் தோன்றுகிறது. இலங்கையில் சிறைப்பட்டிருந்த சீதையை இராமன் நடத்திய முறைமைக்கு வால்மீகி நேரடியாக ஏதும் ஆதாரம் அளிக்கவில்லை எனினும் அடியிற் காணும் பகுதியில் இராமன் தன் மனைவி சீதையிடம் சொல்கிறான் : (யுத்த காண்டம், சருக்கம் 115, சுலோகம் 1-23)

"உன்னை சிறைப் பிடித்தானே அந்த எதிரியைக் கடும் போரில் தோற்கடித்து பணயப் பரிசாய் உன்னை மீட்டு வந்துள்ளேன். என் எதிரியை வீழ்த்தி தன் மதிப்பைக் காப்பாற்றியுள்ளேன். என் போர்த் திறத்தை மக்கள் கண்டு மெச்சினர். என்னுடைய உழைப்பு பலனளித்திருப்பது எனக்கு பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இராவணனைக் கொன்றிடவும் அவனால் ஏற்பட்ட அவமானத்தை துடைத்திடவுந்தான் நான் இங்கு வந்தேனே ஒழிய உனக்காக நான் இப்பெருந் தொல்லையை மேற் கொள்ளவில்லை."

இராமன் சீதையிடம் இதைவிடக் கொடுஞ் செயல் வேறு என்ன செய்திருக்க முடியும்? இராமன் அதோடு நிற்கவில்லை, சீதையை நோக்கி மேலும் கூறுகிறான்: "உன் நடத்தையை நான் சந்தேகிக் கிறேன். இராவணன் உன்னைக்களங்கப் படுத்திருக்க வேண்டும். உன்னைப் பார்க்க எனக்கு பெரும் எரிச்சலூட்டுகிறது. ஓ, ஜனகனின் மகளே! உனக்கு விருப்பமுள்ள இடத்திற்கெங்காவது நீ போய்ச் சேரலாம். உன்னோடு எனக்கு எந்தத் தொடர்பு மில்லை. போரிட்டு உன்னை மீண்டும் மீட்டு வந்தேன். என்னுடைய நோக்கம் அவ்வளவே! உன்னைப் போன்ற அழகிய பெண்ணொருத்தியை இராவணன் சும்மா விட்டிருப்பானா என்பதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை."

இப்படிப்பட்ட இராமனை சீதை அற்பத்தன மானவன் என இகழ்ந்திடுவது இயல்பே. தான் கவர்ந்து சென்ற சீதையை இராவணன் களங்கப் படுத்தியிருப்பான் என்ற எண்ணத்தை-சிறைப் பட்டிருந்த வேளையில் தன்னை சந்திக்க வந்த அனுமன் மூலம் சொல்லியனுப்பி- அதன் அடிப் படையில் சீதையை கை கழுவி விடுகிறேன்-என்று இராமன் புலப்படுத்தி இருந்தால் இவ்வளவு சிரமத்திற்கு இடமிருந்திருக்காது-"நானே தற் கொலைச் செய்து என்னை மாய்த்துக் கொண்டி ருப்பேனே"-என்று சீதை வெளிப்படையாக சொல்கிறாள். இப்படிப்பட்ட இராமனை சீதை அற்பத்தனமானவன் என இகழ்ந்திடுவது இயல்பே.

தோழர் அம்பேத்கர் எழுதிய 'இராமன் - கிருஷ்ணன்: ஒரு புதிர்' நூலில் இருந்து

# தோழர் அம்பேத்கர் நினைவு நாள் டிசம்பர் 6

அதி அசுரன்

# 01.01.2018: திராவிடர் - ஆரியச் சமரின் 200 வது ஆண்டு வீரவணக்க நாள்

கி.பி.1749. மராட்டியப் பேரரசின் இறுதி மன்னரும், சிவாஜியின் பேரனுமான சத்ரபதி சாகுஜி மரணமடைந்தார். அப்போது படைத்தலைவனாக இருந்த பேஷ்வா பார்ப்பனரான பாலாஜி பாஜிராவ், மன்னர் சாகுஜியின் வாரிசைச் சிறையில் அடைத்துக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.

1749 வரை படைத்தலைவனாக இருந்து இந்துமதக் கொடுஞ்சட்டமான மனுசாஸ்திரத்தை மேலோட்டமாகச் செயல்படுத்திய பாலாஜி பாஜிராவ், ஆட்சிக்கு வந்தவுடன் மிகக் கடுமையாக நடை முறைப்படுத்தத் தொடங்கினான். அவனது வழிவந்த இரண்டாம் பாஜிராவ் 1796 ல் மராட்டிய அரசனாகிறான். இவனது ஆட்சிக் காலத்தில் நடந்த பார்ப்பனக் கொடுமைகள் தான் ஒட்டு மொத்த மராட்டியப் பேரரசும் முடிவுக்கு வருவதற்குக் காரணமானது.

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது ஜாதியின் அடையாளமாக கையில் கருப்புக்கயிறு கட்டியிருக்க வேண்டும். அதைப் பார்த்துப் பார்ப்பனர்கள் தலித்து களிடமிருந்து ஒதுங்கிச் சென்று விடுவார்கள். தெருவில் நடக்கும் போது கழுத்தில் ஒரு பாத்திரத்தைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டே நடக்க வேண்டும். எதற்காக? ஒரு வேளை எச்சில் துப்ப வேண்டி வந்தால், தலித்துகளின் எச்சில் பார்ப்பனர்கள் நடக்க வேண்டிய மண்ணில் விழக் கூடாது. பார்ப்பனர்கள் அதை மிதித்து விட்டால் பெரும் தீட்டு. அதனால், தலித்துகள் கழுத்தில் கலயத்தைக் கட்டி நடக்க வேண்டும்.

இடுப்புக்குப் பின்னால் ஒரு பனை ஓலை அல்லது வெளக்கமாரைக் கட்டித் தொங்கவிட்டு நடக்க வேண்டும். அந்தப் பனை ஓலை தலித்துகள் நடந்து செல்லும்போது மண்ணில் பதியும் அவனது காலடித் தடத்தை அழித்துக் கொண்டே செல்ல வேண்டும். தலித்துகளின் காலடித் தடித்தைப் பார்ப்பான் மிதித்து விட்டால் தீட்டாகிவிடும். தாழ்த்தப்பட்டோர் கல்வி கற்கக்கூடாது. ஆயுதங்கள் எதையும் வைத்திருக்கக்கூடாது.

பேஷ்வாக்களின் படைப்பிரிவில் இஸ்லா மியர்கள்கூடச் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் அதில் சேர்க்கப்படுவதில்லை. இப்படி மிகக் கடுமையான தீண்டாமை வன் கொடுமைகள் சட்டமாக்கப்பட்டன. இவற்றை மீறினால் மரண தண்டனை வரை விதிக்கப்பட்டது.

இந்த நடத்தை விதிகளும், அவைகளை மீறினால் கொடுக்கப்படும் தண்டனைகளும், இந்து மதத்தின் புனித நூலான மனுசாஸ்திரத்தில் விளக்க மாக எழுதப்பட்டுள்ளன. கி.பி 1 ஆம் நூற்றாண்டி லிருந்து - இந்துப் பார்ப்பனர்களின் ஆட்சி தொடங்கிய நாளிலிருந்து இந்தமனுசாஸ்திரக் கொடுமைகள் சட்டமாகவே மாறிவிட்டன. அதன் தொடர்ச்சிதான் மராட்டிய பேஷ்வாக்களின் ஆட்சிக் காலத்திலும் நடந்தது.

இந்த இந்து மதக் கொடுமைகளால் ஒடுக்கப் பட்ட தலித் மக்கள் மனதில் விடுதலைக்கனல் கனன்று கொண்டே இருந்தது.அந்த நேரத்தில்,1817-ல் ஆங்கிலேயர்களுக்கும், பார்ப்பன பேஷ்வா மன்னர் களுக்கும் இடையே இருந்த வரி வசூல் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட்டு, இரு பிரிவுக்கும் இடையே போர் மூண்டது.

இந்து மத சாஸ்திர சம்பிரதாயங்களால் அடக்கப்பட்டிருந்த மக்களுக்கு, இப்போர் பெரும் வாய்ப்பாக வந்தது. 1927 ல் இந்தியாவுக்கு சைமன் கமிஷன் வந்த போது, அதைப் பெரியாரும், அம்பேத்கரும் வரவேற்று, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் விடியலுக்கு அக்குழுவைப் பயன்படுத்திக் கொண்டதைப் போல, 1817 ஆம் உருவான போரை மராட்டிய தலித் மக்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

Bombay Native Infantry regiment என்ற ஆங்கிலேயப் படைப்பிரிவுக்கும் பார்ப்பன இரண்டாம் பாஜிராவின் படைப்பிரிவிற்கும் போர் நடந்தது. ஆங்கிலேயரின் படைப்பிரிவின் தலைவ ராக Colonel FF Staunton இருந்தார். இப்பிரிவில் தாழ்த்தப்பட்ட மகர் எனும் ஜாதியைச் சேர்ந்தோர் 500 பேர் வீரர்களாக இணைந்தனர். வரலாற்றில் இப்படை ‘மகர் ரெஜிமண்ட்’ என்று அழைக்கப் பட்டது. இந்த மகர் ரெஜிமண்ட்டில், தாழ்த்தப்பட்ட மகர் ஜாதியினர் மட்டும் அல்ல; பிற்படுத்தப் பட்டவர்களும், மலைவாழ் மக்களும், பழங்குடி யினரும், இஸ்லாமியரும் பங்கேற்றிருந்தனர் என்பதே மிக முக்கியமான வரலாறு.

தலித்துகளின் தலைமையில் - பெரும் பான்மையில், பிற்படுத்தப்பட்டவர், பழங்குடியினர், மலைவாழ் மக்கள், இஸ்லாமியர் என இந்த நாட்டின் மண்ணின் மைந்தர்களான திராவிடர்கள் அனை வரும் ஒன்றிணைந்து - இந்த ஒட்டு மொத்த மக்களுக்கும் எதிரிகளான, அந்நியர்களான பார்ப் பனர்களை எதிர்த்தும் - பார்ப்பன ஆதிக்கத்திற்கு

அடிப்படையான வேதங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்களுக்கு எதிர்த்தும் ஒரு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தியப் பகுதியில் நடந்த உண்மையான சுதந்திரப் போராட்டம் என்றால்அது இந்தப் போராட்டம் தான்.1847 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் இரவு 8 மணிக்கு, புனே அருகிலுள்ள கோரிகான் என்ற சிற்றூரில் உள்ள பீமா என்ற நதிக்கரையில் போர் தொடங்குகிறது.

இரண்டாம் பாஜிராவின் படைத்தலைவன் பார்ப்பன கோகலே தலைமையில் 20000 படைவீரர்கள் அணிவகுத்தனர். இதில் 15000 க்கும் மேற்பட்டவர்கள் பார்ப்பன பேஷ்வாக்கள். இருபதாயிரம் பார்ப்பனப் படைக்கும், வெறும் 500 பேர் கொண்ட திராவிடர் படைக்கும் நேரடிப் போர் தொடங்கியது.

*1818 ஜனவரி 1 ஆம் நாள் பார்ப்பனப் படைப்பிரிவு அழித்து ஒழிக்கப்பட்டது. 12 மணி நேரத்திற்குள் சுமார் 600 பார்ப்பனர்கள் களத்திலேயே கொல்லப்பட்டார்கள். பலர் சிதறி ஓடினார்கள். பலர் ஓரிரு நாட்களில் இறந்தார்கள். பார்ப்பனப் படைத்தலைவனும் களத்திலேயே கொல்லப்பட்டான்.*

மராட்டியப் பார்ப்பனப் பேரரசு முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாஜிராவ் அரசாங்க விருந்தாளியாக அழைத்துச் செல்லப்பட்டார். 1851 ல் ஆங்கிலேய அரசாங்கம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த பீமா நதிக்கரைப் போரின் நினைவாக, போர் நடந்த பீமா நதிக்கரையிலேயே ஒரு நினைவுத் தூணை எழுப்பியது. வீரஞ்செறிந்த அப்போரின் 200 வது ஆண்டு வீரவணக்க நாள் 2018 ஜனவரி 1ல் வருகிறது.

*1927 ஜனவரி 1 ஆம் நாள் தோழர் அம்பேத்கர்* தனது தோழர்களுடன் கோரிகான் பீமா நதிக் கரையில் உள்ள மகர் ரெஜிமண்ட் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தினார். இப்போரின் வெற்றியின் அடையாளமாகத்தான் 'ஜெய்பீம்' என்ற முழக்கமும் முழங்கப்பட்டது.

இன்று 'மன்னராட்சி' என்ற நிர்வாக முறையிலிருந்து 'மக்களாட்சி' என்ற முறைக்கு இந்தியா மாறிவிட்டது. ஆனால், பார்ப்பன புஷ்யமித்ர சுங்கன் ஆட்சி காலம் தொடங்கி, குப்தர்களின் ஆட்சி, பேஷ்வாக்கள் ஆட்சி என நம்மைத் தொடர்ந்து ஒடுக்கிவரும் இந்து மத வேதங்களும், மனுசாஸ்திரச் சட்டங்களும் இன்னும் ஒழியவில்லை.

மராட்டிய பேஷ்வாக்களை நேரடியாகப் போர்க்களத்தில் வென்றோம். ஆனாலும் அடிமைத்தனம் ஒழியவில்லை. ஏனென்றால், நாம் அடக்கப்படுவது ஒரு தனி மனிதராலோ - ஒரு குறிப்பிட்ட பேரரசாலோ, ஒரு குறிப்பிட்ட கட்சி ஆட்சியாலோ மட்டுமல்ல. பார்ப்பனர்களுக்கும், அவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் அரசர்களுக்கும், பிரதமர்களுக்கும் மேலே நிரந்தர ஆதிக்கக் கருத்தியலாக இருக்கும் இந்துமத வேதங்களாலும், சாஸ்திரங்களாலும் அவை உருவாக்கியுள்ள பண்பாடுகளாலும்தான் அடிமைப்படுத்தப் பட்டோம். அவற்றை அழித்து ஒழிக்காமல் நமக்கு வெற்றி என்பது உண்மையல்ல.

பீமா கோரிகான் என்ற களத்தில் பார்ப்பனர் களான சில தனி மனிதர்களை வென்றோம். ஆனால், நம்மை அடிமைப்படுத்தும் இந்து மதத்தை நாம் இன்னும் வெல்லவில்லை. பார்ப்பனர்களுக்கு எதிராகவும், நமக்குள்ளும் உள்ள பார்ப்பனியத்துக்கு எதிராகவும் போரைத் தொடங்குவோம், வெல்வோம் என்று 200 வது ஆண்டில் உறுதி ஏற்போம்!



# காட்டாறு வெளியீடுகள்



















காட்டாறு வெளியீடு
103 / 104 எம்.சி வணிக வளாகம்
நேதாஜி சாலை, பொள்ளாச்சி - 642 001
kaattaaru2014@gmail.com
97868 89325, 99762 56821, 99427 38950, 98940 69973

Owner and Publisher by : S.Vijayaragavan
Consulting Editor: C.Ragavan

# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com